# மகிழ்ச்சியான வீட்டின் கூறுகள்

## مقومات البيت السعيد

தயாரித்தவர்
முஹம்மது பின் அப்துல் ரஹ்மான் அல்-ஜீர்

اعداد

محمد بن عبد الرحمن الزير

மொழிபெயர்ப்பு
முஹம்மது ரஹீம் ஆடம் பவுலா

ترجمة

محمد رحيم ادم بولا

شبكة الألوكة
www.alukah.net

# பீடிகை

புகழ் அனைத்தும் அல்லாஹ்வுக்கே. ஸலாத்தும், ஸலாமும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீது உண்டாவதாக. அல்லாஹ் கூறுகின்றான்: நலவின் பால் (மக்களை) அழைத்து நன்மையை ஏவி, தீமையை விட்டும் தடுக்கும் ஓர் கூட்டம் உங்களில் இருக்கட்டும். அவர்கள் தாம் வெற்றியாளர்கள். (2:104) நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்: மார்க்கம் (தீன்) என்பது நலம் நாடுவதுதான். நாங்கள் யாருக்கு (நலம் நாடுவது) என்று கேட்டோம். அல்லாஹ்வுக்கும், அவனது தூதருக்கும முஸ்லிம் தலைவர்களுக்கும், பொதுமக்களுக்கும் என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பதிலளித்தார்கள் (முஸ்லிம்) .

ஸவூதியில் விவாகரத்து அதிகம் இடம்பெறுவதாக ஸவூதி வானொலியில் ஒலிபரப்பாகும் “அல்லாஹும்ம பிக அஸ்பஹ்னா” என்ற நிகழ்ச்சியில் கேட்டேன். இச்செய்தி எனக்கு கவலையை ஏற்படுத்தியது. கணவன், மனைவி இருவருக்கும் இது பற்றிய தெளிவையும், திருமன வாழ்வின் இன்பங்கள், மற்றும்

தடைகள் பற்றியும் மக்கள் கூறுவது போன்று மனவாழ்க்கை ஒரு மாத தேன் நிலவு அல்ல வாழ்நாள் முழுவதும் தேன் நிலவாக இருக்க வேண்டும் என்பதற்கான வழிகளை விளக்குவதற்காக இப்புத்தகத்தை எழுதினேன். பின்னர் அதனை அறிஞர்களிடம் காண்பித்த போது, மேலும் பல விளக்கங்கள் அவர்களிடமிருந்து கிடைக்கப் பெற்றது. அல்லாஹ் அவர்களுக்கு நற்கூலி வழங்குவானாக.

அல்லாஹ் கணவன், மனைவி யாவருக்கும் தவ்பீக் செய்து, அவர்களுக்கு நேரான வழியைக் காட்டி, உள்ளத்தின் கெடுதிகள் மற்றும் ஷைத்தானின் தீங்குகளிலிருந்து இருவரையும் காப்பாற்றுவானாக. இப்பணியை இறைவனுக்குரிய தூய பணியாக ஆக்குவானாக. இந்நூலைப் படித்து ஆலோசனைகளை வழங்கியவர்களுக்கு அல்லாஹ் நற்கூலி வழங்கி, நன்மையின் தட்டில் அதனை சேர்த்து விடுவானாக. மேலும் அவர்களின் பாவங்கள், அவர்களின் பெற்றோர் மற்றும் முஸ்லிம்கள் அனைவரின் பாவங்களையும் மன்னிப்பானாக. எமது நபி முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீதும் அவர்களின் குடும்பத்தினர் தோழர்கள்

அவைனவர் மீதும் அல்லாஹ்வின் சாந்தியும் சமாதானமம் நிலவட்டுமாக .

முஹம்மத் பின் அப்துர்ரஹ்மான் அஸ் ஸுபைர் அழைப்பு வழிகாட்டல் மற்றும் முஸ்லிம் சமய விவகார அமைச்சின் அழைப்பாளர்.

# முன்னுரை

நமக்கு நேரான வழியைக் காட்டிய அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும். அவனின் நேரான வழியைக் காட்டியிருக்கா விட்டால் நாம் நேர்வழி பெற்றிருக்க முடியாது. அல்லாஹ்வைத் தவிர வணக்கத்துக்குத் தகுதியானவன் வேறு யாரும் இல்லை என்றும் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அல்லாஹ்வின் அடியாரும் தூதரும் ஆவார்கள் என்றும் சான்று பகர்கிறேன். அண்ணலார் மீதும் அவர்களின் குடும்பத்தினர் தோழர்கள் அனைவர் மீதும் அல்லாஹ்வின் சாந்தியும் சமாதானமும் நிலவட்டுமாக.

அல்லாஹ் கூறுகின்றான்: நீங்கள் நல்லுபதேசம் பெறும் பொருட்டு, ஒவ்வொன்றிலும் ஜோடிகளைப் படைத்தோம். (51:49) பூமியை நிர்மாணிப்பதற்கும், திருமணத்தில் தனி நபர், சமூக நலன்கள் காணப்படுவதாலும், மனித பரம்பரை தொடர்வதற்கும் இஸ்லாம் திருமணத்தை வலியுறுத்துகிறது. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்: அதிகம் குழந்தை பெறுகின்ற, அதிகம் அன்புகாட்டுகின்ற பெண்களைத் திருமணம் செய்யுங்கள். மறுமையில்

சமூகங்களிடம் உங்களைப் பற்றி பெறுமைப்படுவேன் என்று கூறினார்கள். ( அபூதாவூத் 250 (நஸயி 3227)

திருமண பந்தத்தில் காணப்படும் மகத்தான பிணைப்பை பார்க்கின்றவர் இஸ்லாம் அதற்கு பாரிய பாதுகாப்பை இட்டு, அதனை அல்லாஹ்வின் எல்லைகளில் ஒன்றாக ஆக்கி, திருமணத்தின் ஆரம்பத்தில் அல்லது இறுதியில் இந்த உறவை மேண்மைப்படுத்தி கடுமையான உடண்படிக்கை என்றும் பெயரிட்டுள்ளதைக் கவனிக்கலவாம்.

இம்மையில் ஒரு மனிதன் அடைகின்ற பெரிய பாக்கியம் நல்ல மனைவியாகும். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதாக இப்னு உமர் (றழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: உலக வாழ்வு இன்பமானதாகும். உலக இன்பங்களில் மேலானது நல்ல மனைவியாகும். ( புகாரி: 1467)

ஒவ்வொரு மனிதனும் தனது மனைவியுடன் இன்பமாக, சந்தோசமாக வாழவே விரும்புகின்றான். இந்த அமைதியான வாழ்வு மிக அவசியமானதாகும். ஆனால் இறைவனின் உதவியிலும், இனிமையான திருமண வாழ்க்கைக்குரிய வழிமுறைகளை கடைபிடிப்பதிலும், இதற்கு தடையாக இருப்பவைகளை விட்டும் தூரமாகி இருப்பதிலுமே

தங்கியிருக்கிறது. இவைகளைப் பற்றியே இந்நூல் எழுதப்பட்டுள்ளது.

# மகிழ்ச்சியான வீட்டை உருவாக்குவது எப்படி

சில கணவன், மனைவியர் அலட்சியமாக இருக்கின்ற செயல்முறைகள், வணக்க வழிபாடுகள் உள்ளன. அவைகளுக்கும் திருமனவாழ்க்கைக்கும் தொடர்பு இல்லை என நினைக்கின்றனர்.உண்மையில் அவர்கள் அலட்சியமாக இருக்கின்ற செயல்களும் வணக்க வழிபாடுகளும் மகிச்சியான திருமண வாழ்க்கைக்கு அவசியமானதாகும். அவைகளில்:

## 1- தொழுகை

குடும்ப மகிச்சிக்கான காரணங்களில் தொழுகை முதன்மையானதாகும். கலிமாவைக் கூறிய பின் கடைபிடிக்க வேண்டிய மகத்தான கடமையாகும். தொழுகை அல்லாஹ்வுக்கும் அடியானுக்குமுள்ள தொடர்பாகும். அது தொழுகையாளிகளுக்கு அமைதியை ஏற்படுத்தும்.

கணவன் மனைவிக்கிடையில் பரஸ்பர அன்பு ஏற்பட்டு, பிரச்சினைகளை விட்டும் தூரமாகி, வீடுகளில் அமைதி ஏற்பட தொழுகையை பேணிக்கொள்வது மிகப்பெறும் காரணிகளில் ஒன்றாகும். அதன்மூலமே அல்லாஹ்வின் அருள்

அவர்கள் மீது இறங்குகிறது. அல்லாஹ் கூறுகின்றான்: நம்பிக்கையர்களான ஆண்களும் பெண்களும் அவர்களில் சிலர் மற்றும் சிலருக்கு உதவியாளர் களாவர். அவர்கள் நன்மையை ஏவுகின்றனர். தீமையை விட்டும் தடுக்கின்றனர். தொழுகையை நிலைநாட்டி, ஸகாத்தையும் கொடுத்து, அல்லாஹ்வுக்கும் அவனது தூதருக்கும் கட்டுப்பட்டு, நடக்கின்றனர். அவர்களுக்கு அல்லாஹ் அருள்புரிவான். நிச்சயமாக அல்லாஹ் யாவற்றையும் மிகைத்தவன் ஞானமிக்கவன். ( 9:71)

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அலி (றழி) பாதிமா (றழி) ஆகிய இருவருக்கும் தொழுகையை கடைபிடிக்குமாறு வழிகாட்டினார்கள். அலி (றழி) அவர்கள் கூறுகின்றார் கள்: நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஒரு நாள் இரவு நபிகளாரின் மகள் பாத்திமாவையும் என்னையும் பார்க்க வந்து, நீங்கள் தொழக்கூடாதா என்று கேட்டார்கள். அதற்கு நான் கூறினேன் அல்லாஹ்வின் தூதரே எமது ஆத்மாக்கள் அல்லாஹ்வின் கையிலே உள்ளன. எம்மை எழுப்ப நாடினால் எழுப்பி விடுவான். இவ்வாறு நான் கூறிய பின் நபிகளார் சென்று விட்டார்கள். எதனையும் திருப்பிக் கூறவில்லை. பின்னர் நபியவர்கள்

திரும்பிச் செல்லும் போது, தனது தொடையில் கையை அடித்துக்கொண்டு, “மனிதன் அதிகம் தர்க்கம் புரிபவனாகவே இருக்கிறான்” என்ற திருவசனத்தை ஓதிக்கொண்டு சென்றார்கள். நபிலான தொழுகயை தொழுவதற்கே அவர்கள் இருவரையும் நபியவர்கள் எழுப்பாட்டினார்கள் என்றால் பர்ழான தொழுகையின் நிலை எவ்வாரிருக்கும் என்பதை கவனித்துப்பாருங்கள்.

நிச்சயமாக தொழுகையை பேணித் தொழுவது வாழ்க்கையை கலங்கப்படுத்தி, மனிதனை துர்ப்பாக்கியவானாக மாற்றுகின்ற மானக்கேடான தீய விடயங்களை விட்டும் முஸ்லிமான ஆணையும், பெண்ணையும் பாதுகாக்கின்றது. அல்லாஹ் கூறுகின்றான்: நிச்சயமாக தொழுகை மானக்கேடானதையும், வெறுக்கத்தக்கதையும் விட்டு தடுக்கும். (29:45). தொழுகையில் அலட்சியமாக இருப்பது வீடுகளில் பிரசச்சினைகள், குழப்பங்கள் ஏற்பட்டு, விவாகரத்தில் முடிந்து விடக்கூடிய மிகப் பெறும் காரணிகளில் ஒன்றாகும்.

விவாகரத்து பற்றி குறிப்பிடுகின்ற திருமறை வசனங்களுக்குப் பின் அல் பகரா அத்தியாயத்தில் அல்லாஹ் கூறுகின்றவைகளை சிந்தித்துப் பாருங்கள். சங்கைக்குரிய சகோதர, சகோதரிகளே! அல்லாஹ்

கூறுகின்றான்: தொழுகையையும் (குறிப்பாக) நடுத் தொழுகையையும் பேணிக் கொள்ளுங்கள். அல்லாஹ்வுக்கு (முற்றிலும்) அடிபணிந்தவர்களாக நில்லலுங்கள். (2:238). வீடுகளில் அமைதி ஏற்பட தொழுகையபைப் பேணித் தொழுவது மிகப்பெறும் காரணிகளில் உள்ளதாகும்.

இஸ்லாமிய விழிப்புணர்வு பணியில் கடமையாற்றிய போது, விவாகரத்து பற்றிய பல வினாக்கள் என்னிடம் வரும். விவாகரத்து பற்றி என்னிடம் கேட்டு, சங்கைக்குரிய முப்தியிடம் அனுப்புவதற்கு முன் அவரிடம் தொழுகையைப் பற்றி கேட்கின்ற போது, கவலையான பதிலே கிடைக்கும். விவாகரத்து செய்தவர்களில் அதிகமானோர் தொழுகையில் அலட்சியமாக இருந்துள்ளனர்.

மதிப்பிற்குரிய சகோதர சகோரிகளே! தொழுகையைப் பேணி வருவது உங்கள் அன்றாட வாழ்க்கையின் பிரகாசமாகும். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்: யார் தொழுகையைப் பேனித் தொழுகின்றாரோ அது அவருக்கு மறுமையில் பிரகாசமாகவும், அத்தாட்சியாகவும், வெற்றியாகவும் இருக்கும். யார் தொழுகையில் அலட்சியமாக இருக்கின்றாரோ மறுமையில் அது அவருக்கு பிரகாசமாகவோ,

அத்தாட்சியாகவோ, வெற்றியாகவோ இருக்காது. மறுமையில் காரூன், பிர்அவ்ன், ஹாமான், உபையிப்னு கலப் போன்றோருடன் எழுப்பப்படுவான். (அஹ்மத் 6576)

2- ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் ஓத வேண்டிய திக்ருகளை ஓதி வருவது.

திக்ருகளை ஓதுவது தொழுகைக்கு அடுத்துள்ள வணக்கங்களில் உள்ளதாகும். பொறாமை, குரோதம், பிறர் இரகசியங்களில் தலையிடுவது போன்றவற்றின் மூலம் மனிதர்கள் மீது ஆதிக்கம் செலுத்துகின்ற ஜின்கள், ஷைத்தான்களில் இருந்து பாதுகாத்துக்கொள்வதற்கும், வீட்டின் அமைதியைப் போக்கி, கெடுத்தி விடுகின்ற விடயங்களை விட்டும் பாதுகாப்பதற்கும் இஸ்தீரனம் பெறுவதற்கும் திக்ருகளை ஓதி வருவதற்கு பாரிய தாக்கம் உள்ளது.

மதிப்பிற்குரிய சகோதர சகோதரிகளே! தீமைகளை ஏற்படுத்தி, கணவன், மனைவி உறவுகளைக் கெடுத்தி விடுவதற்கு தங்களையும், தம்மிடமுள்ளவைகளையும் வசப்படுத்தி வைத்துள்ள ஷைத்தான்களிலிருந்து எவ்வாறு எம்மைப் பாதுகாத்துக் கொள்வது. அல்லாஹ்வின் உதவியின்

மூலமும், திக்ருகளை ஓதி வருவதின் மூலமே அவைகளை விட்டும் பாதுகாத்துக் கொள்ள முடியும்.

மதிப்பிற்குரிய சகோதர சகோதரிகளே! பின்வரும் நபி மொழிகளை சிந்தித்துப்பாருங்கள்.

1- வீட்டுக்குள் நுழையும் போதும், சாப்பிடும் போதும் ஓதுகின்ற திக்ரின் தாக்கத்தை ஹதீஸ் தெளிவுபடுத்துகிறது. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறுவதைக் கேட்டதாக ஜாபிர் பின் அப்தில்லாஹ் (றழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஒருவர் வீடுட்டுக்குள் நுழையும் போதும், சாப்பிடும் போதும் திக்ர் செய்தால், இன்று உங்களுக்கு இரவு உணவும், தங்க இடமும் கிடையாது என்று ஷைத்தான் மற்ற ஷைத்தான்களுக்கு கூறுவான். வீட்டுக்குள் நுழையும் போது, திக்ர் ஓதா விட்டால் உங்களுக்கு தங்குமிடம் கிடைத்து விட்டது என்று ஷைத்தான் கூறுவான். சாப்பிடும் போது, திக்ர் செய்யாவிட்டால் உங்களுக்கு இரவு உணவும், தங்குமிடமும் கிடைத்து விட்டது என்று கூறுவான். ( முஸ்லிம் 2018).
2- உடலுறவின் போது துஆ ஓதுவதின் பயன். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள்

கூறியதாக இப்னு அப்பாஸ் (றழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஒருவர் பிஸ்மில்லாஹி அல்லாஹும்ம ஜன்னிப்னிஷ் ஷெய்தான வஜன்னிபிஷ் ஷெய்தான மா றஸக்தனா என்று கூறி, உடலுறவில் ஈடுபட்டு, அதன் மூலம் அவ்விருவருக்கும் அல்லாஹ் குழந்தைப் பாக்கியத்தை ஏற்படுத்தினால் அக்குழந் தைக்கு ஷைத்தானால் ஒரு போதும் பாதிப்பு ஏற்படாது. (புகாரி 5165)

3- வீட்டில் இருந்து வெளியே செல்லும் போது துஆ ஓதுவதின் பயன். உம்மு ஸலமா (றழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் வீட்டில் இருந்து வெளியே செல்லும் போது, நபியவர்கள் பின்வரும் துஆவை ஓதுவார்கள். பிஸ்மில்லாஹி தவக்கல்து அலல்லாஹி அல்லாஹும்ம இன்னா நஊதுபிக மின் அன் நஸில்ல அவ் நுழல்ல அவ் நழ்லிம அவ் நுழ்லம அவ் நஜ்ஹல அவ் யுஜ்ஹல அலைனா (திர்மிதி 3427) .

4- நாளாந்தம் ஓதும் திக்ரின் பயன்: நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதாக அபூ ஹுரைரா (றழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: யார் லாஇலாஹ

இல்லல்லாஹு வஹ்தஹு லா ஷரீக்க லஹு லஹுல் முல்கு வலஹுல் ஹம்து வஹுவ அலா குல்லி ஷைஇன் கதீர் என்று நுறு முறை கூறுகின்றாரோ அவருக்கு பத்து அடிமைகளை உறிமையிட்ட நன்மை வழங்கப்பட்டு, நுறு நன்மைகள் எழுதப்பட்டு, நுறு தீமைகள் அழிக்கப்பட்டு மற்றும் அன்றைய தினம் மாலை ஆகும் வறை அவருக்கு ஷைத்தானிடமிருந்து பாதுகாப்பும் கிடைக்கும். இதை விடவும் அதிகமாக அமல் செய்தவரைத் தவிர. இந்த திக்ரை கூறியவரை விட வேறு யாரும் சிறப்பான ஒன்றை செய்து விட முடியாது. (புகாரி 3293).

5- காலை, மாலை மற்றும் ஏனைய நேரங்களில் நபியவர்கள் ஓதிய திக்ருகளை சிந்தித்துப் பாருங்கள். திக்ர் செய்வது உள்ளங்களுக்கு அமைதியையும், எழுச்சியையும் ஏற்படுத்தும். அல்லாஹ் கூறுகின்றான்: அறிந்து கொள்ளுங்கள்! அல்லாஹ்வை நினைவு கூர்வதன் மூலம் உள்ளங்கள் அமைதி பெறுகின்றன.( 13:28) . நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதாக அபூ மூஸா (றழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

அல்லாஹ்வை திக்ர் செய்பவருக்கும் திக்ர் செய்யாதவருக்கும் உதாரணம் உயிருடனிருப் பவரையும், மரணித்தவரையும் போன்றதாகும். (புகாரி 6407).

## 3-அதிகம் பிரார்த்தனை செய்வது

சங்கைக்குரிய சகோதர சகோதரிகளே! நன்மைகள் யாவும் அல்லாஹ்வின் கையிலே உள்ளது. மற்றும் அவன் அனைத்தின் மீதும் சக்தியுடையவன் என்பதை முஸ்லிமான ஆண், பெண் அனைவரும் உறுதியாக நம்புகின்றனர். அல்லாஹ் கூறுகின்றான்: அல்லாஹ் ஏதேனும் ஒரு தடங்களை உமக்கு ஏற்படுத்தினால் அவனைத் தவிர அதனை நீக்கி விடுபவன் யாருமில்லை. மேலும், அவன் உமக்கு ஏதேனும் நன்மையை ஏற்படுத்தினால் அவனே யாவற்றின் மீதும் பேராற்றலுடையவன். (6:17). எனவே நாம் உண்மையான முறையில் அல்ாஹ்வின் பக்கம் திரும்ப வேண்டும். அவனே பிரார்த்தனைக ளுக்கு விடையளிப்பதற்கு அண்மையில் இருப்பவன். அவனே போதுமானவன். சிறந்த பொறுப்பாளன். அல்லாஹ் கூறுகின்றான்: துன்பத்திற்குள்ளானவன்

அவனை அழைக்கும் போது, (அவனுக்குப்) பதிலளித்து, கஷ்டத்தை நீக்குபவன் யார் (27:62). பிரார்த்தனைகள் ஏற்றுக்கொள்ப்படும் நேரத்தைத் தெரிவு செய்து, மூன்று முறை பிரார்த்தனை செய்யுங்கள். அல்லாஹ் அனைத்திற்கும் ஆற்றலுடையவன்.

ஒரு இறைவிசுவாசி எவ்வளவு அறிவு, விவேகம் உள்ளவராக இருந்தாலும் தனது வாழ்வில் ஒரு வினாடியேனும் அல்லாஹ்வை விட்டும் அவனிடம் திரும்புவதை விட்டும் தேவையற்றிருக்க முடியாது.

இதனால் நபியவர்கள் பின்வரும் துஆவை ஓதுபவர்களாக இருந்தார்கள். யா ஹையு யா கையூம் பிரஹ்மதிக அஸ்தகீது அஸ்லிஹ் லீ ஷ.்.னீ குல்லஹு” வலா தகில்னீ இலா நப்ஸீ தர்பத அய்ன். பொருள்: என்றும் உயிருடன் இருப்பவனே, நிலைத்திருப்பவனே! உன் அருளைக் கொண்டு உன்னிடம் இறைஞ்சுகின்றேன். எனது கருமங்கள் அனைத்தையும் சீராக்குவாயாக. ஒரு வினாடியேனும் என்னை விட்டு விடாதே! சகோதரனே! திருமணத்திற்கு முன் நல்ல மனைவியை அருளும் படியும் திருமணத்தின் பின் உங்கள் திருமண வாழ்வை அன்பு, கருணையிலும், அல்லாஹ்வின் வழிப்பாட்டிலும் நிலைபெறச் செய்திடும்

படி, பிரார்த்தனை செய்துகொள். மனைவியிடமும் அதே போன்று பிரார்த்தனை செய்ய வேண்டிக்கொள்.

திருமண வாழ்வில் அல்லது பொது வாழ்வில் பிரச்சினைகள் வரும்போதெல்லாம் என்றும் உயிருடன் இருப்பவனும், நிலைத்திருப்பவனுமான அல்லாஹ் விடம் முறையிடுவதற்கு விரைந்து விடு. அவனிடமே நன்மைகள் அனைத்தும் உண்டு. அவன் அனைத்திற்கும் சக்தியுடையவன். அல்லாஹ் கூறுகின் றான்: என்னை அழையுங்கள். நான் உங்களுக்குப் பதிலளிப்பேன் என உங்கள் இரட்சகன் கூறுகின்றான். (40:60) மேலும் கூறுகின்றான்: (நபியே!) என்னைப் பற்றி எனது அடியான் உம்மிடம் கேட்டால், நிச்சயமாக நான் அருகிலேயே இருக்கிறேன். (எனக் கூறுவீராக!) பிரார்த்திப்பவன் என்னை அழைத்தால், அழைப்புக்கு விடையளிப்பேன். (2186).

## 4 – அல்குர்ஆனை ஓதுவது

மகத்துவத்துக்குரிய குர்ஆன் நேர்வழிகாட்டியாக வும், நல்லுபதேசமாகவம், அனைத்தையும் தெளிவுப டுத்தக் கூடியதாகவும், பிரகாசமாகவும், அருளாகவும் இருக்கின்றது. அல்லாஹ் கூறுகின்றான்: மனிதர்களே! உங்கள் இரட்சகனிடமிருந்து ஒரு சான்று உங்களுக்கு

வந்திருக்கின்றது. (குர்ஆன் எனும்) தெளிவான ஒளியை உங்களுக்கு நாங்கள் இறக்கி வைத்துள்ளோம். ஆகவே எவர்கள் அல்லாஹ்வை நம்பிக்கை கொண்டு, அவனைப் பற்றிப் பிடித்துக் கொள்கிறார்களோ அவன் அவர்களைத் தன்னிடமுள்ள கருணையிலும் அருளிலும் நுழைவிப்பான். இன்னும், தன்னிடம் (அவர்கள் வந்து) சேரக்கூடிய நேரான வழியிலும் அவர்களைச் செலுத்துவான். (4:174,175) மேலும் அல்லாஹ் கூறுகின்றான்: மனிதர்களே! உங்கள் இரட்சகனிடமிருந்து உங்களுக்கு நல்லுபதேசமும் உள்ளங்களில் உள்ளவற்றிற்கு நிவாரணியும், நம்பிக்கையாளர்களுக்கு நேர்வழியும், கருணையும் நிச்சயமாக வந்துவிட்டுது. (10:57).

மதிப்பிற்குரிய சகோதர சகோதரிகளே! தினமும் 24 மணித்தியாளங்கள் உள்ளன. இதில் எவ்வளவு நேரத்தை குர்ஆனுக்காக நாம் ஓதக்கியுள்ளோம். ஒரு நாள் இரண்டு நாள் மூன்று நாள் அல்லது அதனை விடவும் அதிகமாக அல்லது ஒருவாரம் அல்லது அதனை விடவும் அதிகமான நாட்கள் குர்ஆனுக்காக நேரத்தை ஒதுக்காமல் கழிந்து விடுகின்றதா!! இதனால் எமது உள்ளங்களில் தனிமையும், பலவீனமும் ஏற்பட்டு விட்டது. மேலும் எமது

உள்ளங்கள் அல்லாஹ்வை விட்டும் தூரமாகி பயனற்ற விடயங்களிலும், இம்மையிலும், மறுமையிலும் தீங்கை ஏற்படுத்தக் கூடிய விடயங்களை வீடுகளுக்குள் கொண்டு சேர்ப்பதிலும் ஈடுபட்டு விட்டது. நிச்சயமாக உள்ளங்கள் விரிவடைவதற்கும், கருமங்கள் இலகுபடுத்தப்படுவதற் கும் அல்லாஹ்வின் நெருக்கத்தைப் பெறுவதற்கும், பரகத் இறங்குவதற்கும், ஷைத்தானை விரட்டுவதற்கும், நன்மைகளை அதிகப்படுத்தவும் மிகப்பெறும் காரணிகளில் குர்ஆன் உள்ளது. மட்டுமள்ள அதுவே அல்லாஹ்வுடன் செய்யும் மிகப்பெறும் இலாபம் தரும் வியாபாரமாகும். அல்லாஹ் கூறுகின்றான்: நிச்சயமாக எவர்கள் அல்லாஹ்வின் வேதத்தை ஓதி, தொழுகையை நிலைநாட்டி, நாம் அவர்களுக்கு வழங்கியவற்றிலி ருந்து இரகசியமாகவும் பரகசியமாகவும் (நல்லறங்களில்) செலவும் செய்கிறார்களோ அவர்கள் நஷ்டமடையாத ஒரு வியாபாரத்தை ஆதரவு வைக்கின்றனர். (35:29,30). குர்ஆன் முழுவதும் நன்மைகளும், கிருபைகளும் நிரம்பியதாகும். நிச்சயமாக இந்தக் குர்ஆன் மிக நேரானதின்பாலே வழிகாட்டுகின்றது. நல்லரங்கள் புரியும் நம்பிக்கை யாளர்களுக்கு நிச்சயமாக மாபெரும் கூலி உண்டு என நன்மாராயம் கூறுகின்றுது. (17:9).

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதாக அபூஉமாமா அல் பாஹிலீ (றழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: அல் பகரா அத்தியாயத்தை ஓதுங்கள். ஏனெனில் அதனை ஓதுவது விஸ்தீரனம் நிரைந்ததாகும். ஓதாமல் விட்டுவிடுவது நஷ்டத்தை ஏற்படுத்தும். அதனை ஓதியவர்களுக்கு சூனியக்காரர்களால் எதனையும் செய்து விட முடியாது. (முஸ்லிம் 2018). அல்குர்ஆனின் விஸ்தீரனங்களை அடைந்து கொண்ட வீடுகளுக்கு வாழ்த்துக்கள் உண்டாவதாக.

6- குடும்பத்தாருடன் நல்லமுறையில் நடந்துகொள்வது.

மதிப்பிற்குரிய சகோரதரா! திருமண வாழ்வு சிறப்படைய அல்லாஹ் பல வழிமுறைகளைக் காட்டுகின்றான். திருமண வாழ்வு நிலைத்திருப்பதற் காக கணவன்மார்கள் மனைவிமார்களிடம் வெறுக்கக் கூடிய சில விடயங்களைக் கண்டாலும் அவைகளைப் பொறுத்து, பொறுமை செய்யுமாறு கட்டலையிடுகிறான். அவர்களுடன் நல்லமுறையில் வாழ்க்கை நடாத்துங்கள். நீங்கள் அவர்களை வெறுத்தாலும் (பொறுத்துக் கொள்ளுங்கள்)

ஏனெனில் நீங்கள் ஒன்றை வெறுக்க, அல்லாஹ் அதில் அதிகமான நன்மைகளை வைத்திருக்கக் கூடும். (4:19). நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்: ஒரு இறைவிசுவாசியான கணவன் இறைவிசுவாசியான மனைவியை வெறுத்து விட்டு விட வேண்டாம். அவளிடம் வெறுக்கின்ற ஒரு பண்பு இருந்தால் அவன் விரும்புகின்ற மற்றொரு பண்பு அவளிடம் உண்டு. (முஸ்லிம் :1469). மேலும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்: பெண்களுக்கு நல்லுபதேசம் செய்யுங்கள். ஏனெனில் பெண் விலா எழும்பிலிருந்து படைக்கப்பட்டிருக்கிறாள்.விலாவில் மிகவும் வலைந்தது அதன் மேற்பகுதியாகும். (புகாரி : 3331 , முஸ்லிம்: 1468). இந்த விடயங்களை மனதில் கொண்டு, நபிகளாரின் வழிகாட்டலுக் கேற்ப மனைவிமார்களுடன் நல்லமுறையில் நடந்துகொள்வது அவசியமாகும்.

அல்லாஹ் கூறுகின்றான்: அவர்களுடன் நல்லமுறையில் வாழ்க்கை நடாத்துங்கள்.94:19). அஷ்ஷெய்க் அப்துர்ரஹ்மான் அஸ்ஸ.்.தி (ரஹ்) அவர்கள் கூறுகின்றார்கள்: சொல்லிலும், செயலிலும் நல்லமுறையில் நடந்துகொள்வதை இத்திருவசனம்

உள்ளடக்குகிறது. எனவே கணவன் தனது மனைவியை நல்லமுறையில் நடாத்துவது, அவளுக்கு நல்லறம் செய்வது, தீங்கு செய்யாமல் இருப்பது அவசியமாகும். அவளுக்கு ஆடை மற்றும் தேவையானவற்றுக்கு செலவு செய்வது இதில் அடங்குகிறது. இது நிலமைகளுக்கு ஏற்ப வேறுபடுவதால் குறித்த காலத்திற்கும், இடத்திற்கும் ஏற்ப கணவன் தனது மனைவிக்கு செலவு செய்வது அவசியமாகும்.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்: உங்கள் குடும்பத்திற்கு சிறந்தவரே உங்களில் சிறந்தவர். நான் எனது குடும்பத்திற்கு சிறந்தவனாக இருக்கிறேன். (புகாரி 3895). மதிப்பிற்குரிய சகோதர சகோதரிகளே இச்சிறப்பு யாருக்கு கிடைக்கிறது? கணவனிடமிருந்து மனைவிக்கு கிடைக்கின்றது. குடும்பத்தை நல்லமுறையில் நடாத்துவதன் மூலமே இச்சிறப்பை ஏற்படுத்த முடியும். இச்சிறப்புகள் அனைத்தும் இறைவனின் உதவிக்குப் பின் பொறுமையின் மூலமே ஏற்பட முடியும். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் இந்த விடயத்தில் சிறந்த உதாரணமாக விளங்கினார்கள். நபியவர்களின் போதனைகளை கணவன் கடைபிடித்தால் அவனின்

நிலமைகள் சீராகி, அன்பு, கருணை, இன்பம் நிறைந்த வாழ்வை வாழ்வான். இவ்வாறும் நிலமை சீராகாவிட்டால் விவாகரத்து செய்வதற்கு முன் கடைபிடிக்க வேண்டிய வழிமுறைகளும், தீர்வுகளும் உள்ளன. இந்த நூலின் இறுதியில் இன்ஷாஅல்லாஹ் அவைகளைக் குறிப்பிடுகிறேன்.

## 7- ஓய்வு நேரத்தை வீட்டில் கழித்தல்

வாழ்வின் பிரச்சினைகள், கவலைகள் போன்றவற்றை தனித்துக் கொள்வதற்கும் அமைதி பெறுவதற்கும் கணவன், மனைவி ஒன்றாக அமர்வது அவசியமானது என்பது அறிந்த விடயமாகும். எனினும் தற்காலத்தில் சில கணவன்மார்கள் தனது மனைவியோடு அமர்வது மிகவும் குறைவாக இருக்கின்றது. வீட்டுக்கு வெளியே ஓய்விடங்கள் போன்ற இடங்களிலே அதிகமான நேரத்தை கழிக்கின்றனர். பின்னர் இந்த ஓய்வகங்களில் என்ன நடைபெறுகின்றது. அல்லாஹ்வே உதவியாளன். அல்லாஹ்வின் உதவியின்றி நல்லதைச் செயவதற்கும், தீமையை விடுவதற்கும் முடியாது. சில வேலை தனது உடம்போடு வீட்டில் இருப்பார். ஆனால் தனது மொபைலில் அல்லது வேறு

வேலைகளில் ஈடுபட்டிருப்பார். அவனின் மனைவி யாரிடம் அமைதி பெறுவது? யாருடன் கதைப்பது? பிள்ளைகளை வளர்ப்பதற்கும், அன்றாட வாழ்வின் பணிகளுக்கும் அவளுக்கு உதவியாக இருப்பது யார்?

வீட்டில் கொஞ்சுமாக அமர்வது அன்பை அதிகப்படுத்துமா? அல்லது குழந்தைப் பராமரிப்பிலும், வீட்டு வேலைகளிலும் பெண் எதிர் நோக்குகின்ற பிரச்சினைகளைக் குறைப்பதற்கு அது பரிகாரமாக அமையுமா? என்பதை சிந்தித்துப் பார்த்தால் மாற்றமாக அது மேலும் பிரச்சினைகளை அதிகப்படுத்தும். அத்தோடு அதன் விளைவாக கணவன்- மனைவி உறவு பலவீனமடைந்து, இறுதியில் மோசமான முடிவையே ஏற்படுத்தும்.

சில பெண்களும், யுவதிகளும் செய்து விடுகின்ற குற்றச் செயல்களுக்கு பிரதானமான காரணம் பெண்கள் ஆண்களிடம் அன்பைப் பெறாமலிருப்பதும் ஆண்களின் மென்மையற்ற நடத்தையும் என நம்பத்தகுந்த ஆய்வுகளும் நிகழ்வுகளும் உறுதிப்படுத்துகிறது. இவ்வாறான நடத்தை பலவீனமான, தனிமையான, மென்மையான உள்ளங்களில் மனித ஷைத்தான்கள் நுழைந்து, ஏமாற்றி விடுவதற்கான வாய்ப்பை ஏற்படுத்தி விடுகிறது.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் வீட்டில் ஏற்படுகின்ற நிகழ்வுகளில் அண்ணலார் கடைபிடிக்கின்ற உயர்ந்த, அழகான வழிமுறைகளை சற்று நோக்கி, அவர்களைப் பின்பற்றினால் எமது உள்ளும், புறமும் மற்றும் அனைத்து நிலமைகளும் சீராகி விடும்.

ஆஇஷா (றழி) அவர்கள் கூறுகின்றார்கள்: நபி ஸல்லல்லாஹுஅலைஹி வஸல்லம் அவர்கள் அஸர் தொழுகை முடிந்து விட்டால் தனது மனைவிமார்களிடம் சென்று அவர்களோடு நெருக்க மாக அமர்வார்கள். (புகாரி 5268). அதாவது அவர்களோடு சேர்ந்திருப்பார்கள். அவர்களை முத்தமிடுவார்கள்.

ஆனால் இரவு நேரங்களில் சில நேரம் மனைவிமார்கள் ஒரே வீட்டில் ஒன்றுகூடுவார்கள். அப்போது நபியவர்கள் அவர்களிடம் வந்து, அவர்களோடு அமர்ந்து கதைப்பார்கள். அனஸ் பின் மாலிக் (றழி) அவர்கள் கூறுகின்றார்கள்: நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு ஒன்பது மனைவிமார்கள் இருந்தார்கள். அவர்களுக்கிடையில் நாட்களைப் பிரித்தால் ஒன்பது நாட்கள் கழியும் வரை முதல் மனைவியிடம் செல்லமாட்டார்கள். நபியவர்கள் வருகின்ற வீட்டில்

அனைத்து மனைவிமார்களும் எல்லா இரவுகளிலும் ஒன்றுகூடுவார்கள். (முஸ்லிம் : 1462).

பெண் அவளை அரவனைக்கின்ற, அவள் கூறுவதைக் கேட்கின்ற ஒருவரின்பால் தேவையுடையவளாக இருக்கிறாள். அவளுக்கு எந்தப் பிரச்சினை இல்லாவிட்டாலும் அவளோடு கதைப்பது மாத்திரமே அவளுக்கு ஆறுதலைக் கொடுக்கும். வீட்டு வேலைகளால், அல்லது பிள்ளைகளால் அல்லது வேறு விடயங்களால் சிரமப்பபடுபவளாக இருந்தால் அவளின் நிலை எவ்வாரிருக்கும். கணவன் மனைவியோடு கதைப்பதால் அவளின் உள்ளத்தில் நாம் எதிர்பார்ப்பதை விட பாரிய தாக்கத்தை ஏற்படுத்துகிறது. ஆனால் நாம் அதை விட்டும் பராமுகமாக இருக்கிறோம். ஆஇஷா (றழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: நபியவர்கள் இரவுத்தொழுகை யை தொழுது முடித்த பின் நான் விழித்திருந்தால் என்னோடு கதைப்பார்கள். நான் தூங்கியிருந்தால் பஜ்ருக்கு அதான் கூறும் வரை சாய்ந்து விடுவார்கள். (புகாரி 1167).

சங்கைக்குரிய கணவன்மார்களே! பஜ்ருக்கு முன் இரவின் கடைசிப் பகுதியில் அல்லாஹ்வின் தூதர் தனது மனைவியோடு கதைப்பவர்களாக இருந்தார் கள். அல்லாஹ்வின் தூதர் தனது மனைவி

விழித்திருந்தால் அவர்களோடு கதைப்பார்கள். தூங்கியிருந்தால் அவர்களை வழிப்பூட்டமாட்டார்கள். இந்த உயர்ந்த, அழகிய பண்பாட்டை சிந்தித்துப் பாருங்கள். நபியவர்கள் புதிதாக திருமணம் செய்கின்ற இரவில் கூட, தனது ஏனைய மனைவிமார்களோடு அமர்வதை விட்டு விடவில்லை. அனஸ் பின் மாலிக் (றழி) அவர்கள் அறிவிக்கின் றார்கள்: ரொட்டியும், இறைச்சியும் விருந்தாக ஏற்பாடு செய்யப்பட்டு, ஸைனப் பின்த் ஜஹ்ஷ் (றழி) அவர்களை நபியவர்களுக்கு திருமணம் செய்து வைக்கப்பட்டது. அப்போது நபியவர்கள் ஆஇஷா (றழி) அவர்களின் அறைக்குச் சென்று அல்லாஹ்வின் சாந்தியும், அருளும் உங்கள் மீது உண்டாவதாக என்று கூறினார்கள். அதற்கு ஆஇஷா (றழி) அவர்கள் அல்லாஹ்வின் சாந்தியும், அருளும் உங்கள் மீதும் உண்டாவதாக என்று பதில் கூறி விட்டு, உங்கள் மனைவி எப்படி இருக்கிறாள் என்று கேட்டார்கள். அவ்வாறே தனது மனவிமார்களின் ஒவ்வொரு அறைக்கும் சென்று ஆஇஷா (றழி) அவர்களுக்கு ஸலாம் கூறியது போன்று, அவர்களுக்கும் ஸலாம் கூறி, ஆஇஷா (றழி) அவர்களைப் போன்று அவர்களும் நபியவர்களுக்குப் பதில் கூறுவார்கள். (புகாரி 4793).

பல கணவன்மார்கள் வேலையைக் காரணம் காட்டி, தனது மனைவியுடன் அமர்வதை விட்டு விடுகின்றனர். மட்டுமல்ல அவ்வாறு அமர வேண்டிய தேவை இல்லை என சிலர் நினைக்கின்றனர். மனைவிமார்களின் தேவைகளை நிறைவேற்றுவது முக்கியமானதாகும். இந்த அமர்வுகளின் மூலம் முதலில் பயனடைபவர் கணவன் என்பதை இந்த அப்பாவி அறியவில்லை. மட்டுமல்ல மனைவி, பிள்ளைகள் அவர்களின் நடத்தைகள், உணர்வுகள் அனைத்திலும் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தும். அல்லாஹ்வே அனைத்திற்கும் உதவியாளன்.

8- கணவன், மனைவி ஒருவரை ஒருவர் புரிந்துகொள்வது.

அல்லாஹ் கணவன், மனைவி ஒவ்வொருவருக்கும் தனியான சிறப்புகளையும், சக்திகளையும் வழங்கியிருக்கிறான். அதனை அவர்கள் அறியமாட்டார்கள். எனக்கு ஞாபகத்தில் உள்ளது. ஒருவர் தனது மனைவியின் ஒரு பிரச்சினை பற்றி என்னிடம் முறையிட்டார். பின்னர் அவருடன் அமர்ந்து, அவரின் மனைவியின் நிலமைகளைப்

பற்றி விசாரித்த போது, அவரின் மனைவிக்கு அல்லாஹ் பல சிறப்புகைளை வழங்கியிருக்கி றான். அவைகளை அவர் பயன்படுத்திக் கொள்ளவில்லை. அவைகளைப் பயன்படுத்தியி ருந்தால் பல பிரச்சினைகள் நீங்கி, வாழ்க்கை அன்பு, பிணைப்பு நிறைந்ததாக மாறியிருக்கும். உண்மையில் கணவன் மனைவியோடு அமர்ந்து அன்பு, பாசத்தோடு கதைக்கும் போது, அவர்களின் நிலமைகள் சீராகி நல்லதொரு மாற்றம் ஏற்படும். அவ்வாறே ஒவ்வொரு மனிதனிடமும் நல்லவைகளும் விரும்பத்தகாதவைகளும் இருக்கின்றன. விரும்பத்தகாதவைகளை விட்டு விட்டு, நல்லவைகளைப் புகழும் போது, கணவன் மனைவிக்கிடையில் நெருக்கம் அதிகரித்து விடுகிறது. அல்லாஹ்வே உதவியாளன்.

## 9- மென்மை

மென்மை என்பது சொல்லிலும், செயலிலும் மென்மையானதையும், இலேசானதையும் கடைபிடிப்பதாகும். உர்வா பின் ஸுபைர் (றழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: நிச்சயமாக அல்லாஹ் அனைத்து விடயங்களிலும்

மென்மையை விரும்புகிறான். (புகாரி 6024, முஸ்லிம் 2163). நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதாக அண்ணலாரின் மனைவி ஆஇஷா (றழி) அவர்கள் அறிவிக்கின்றார் கள்: நிச்சயமாக எதில் மென்மை உள்ளதோ அதை மென்மை அலங்கரிக்கும். எவற்றில் மென்மை இழக்கப்படுகிறதோ அதனை அழகற்றதாகவும் ஆக்கி விடும். ( முஸ்லிம் 2594).

மென்மை கருமங்களில் இருக்கின்ற கனியாகும். நற்பண்பு தான் அக்கனியைத் தரும். கோபம், இச்சை ஆகிய சக்திகளைக் கட்டுப்படுத்தி, அவையிரண்டை யும் நடுநிலையாக வைப்பதின் மூலமே மென்மை ஏற்படும். அனைத்து விடயங்களிலும் மென்மையை கடைபிடிப்பதை நபியவர்கள் அதிகம் புகழ்ந்து கூறியுள்ளார்கள்.

சங்கைக்குரிய சகோதர, சகோதரிகளே! இதுவே மென்மையின் உன்மை நிலையாகும். சிலர் குறிப்பிட்ட ஒரு துறையில் மாத்திரம் மென்மையை சுருக்கி விடுவது போன்றல்ல. புலன் உறுப்புகளால் உணர்கின்ற, உணராத அனைத்து விடயங்களுக்கும் பொதுவானதாகும். தீர்மானங்களை எடுத்தல், பிறருடன் கொடுக்கல் வாங்கள் போன்றவற்றிலும் அவையல்லாத விடயங்களிலும் மென்மை

கடைபிடிக்கப்படுவதைப் போன்றதாகும். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தன்னுடன் இருப்பவர்களுடன் நடந்துகொண்ட முறைகள் அண்ணலாரின் வாழக்கை வரலாற்றில் தெளிவாக விளங்குகிறது. நபிகளாருக்கும், அவர்களின் மனைவிக்கும், யூதர்களில் ஒருவருக்கும் இடையில் நடைபெற்ற உரையாடலை சிந்தித்துப் பாருங்கள். ஆஇஷா (றழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: சில யூதர்கள் நபியவர்களிடம் வந்து, “அஸ்ஸாமு அலைக்கும்” உங்கள் மீது அழிவு உண்டாவதாக என்று கூறினார்கள். ஆஇஷா (றழி) அவர்கள் இதற்குப் பதிலாக உங்களுக்கும் அழிவு உண்டாவதாக. மேலும் அல்லாஹ்வின் சாபமும், கோபமும் உங்கள் மீது உண்டாவதாக என்று கூறினார்கள். உடனே நபியவர்கள் ஆஇஷாவே அமைதி பெறுங்கள். மென்மையாக நடந்துகொள்ளுங்கள். தீயவார்த்தை பேசுவதையும், கடுமையான தன்மையையும் உங்களுக்கு எச்சரிக்கிறேன். அப்போது ஆஇஷா (றழி) அவர்கள் அந்த யூதர்கள் என்ன கூறினார்கள் என்பதைக் கேட்கவில்லையா? எனக் கேட்டார்கள். அதற்கு நபியவர்கள், நான் கூறியதை நீங்கள் கேட்கவில்லையா? நான் அவர்களுக்கு பதில் கூறினேன். எனது பிரார்த்தனை ஏற்றுக்கொள்ளப்படும். அவர்கள் எனக்கெதிராக கேட்ட

பிரார்த்தனை ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது என்று கூறினார்கள்.(முஸ்லிம் 2594).

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதாக அபுத்தர்தா.ஃ. (றழி) அவர்கள் அறவிக்கின்றார்கள்: யாருக்கு மென்மைப் பாக்கியம் கிடைக்கிறதோ, அவருக்கு நன்மையின் பங்கு கிடைத்து விட்டது. யாருக்கு மென்மைப் பாக்கியம் தடுக்கப்படுகிறதோ, அவருக்கு நன்மையின் பாக்கியம் தடுக்கப்படுகிறது. (திர்மிதி: 2013). மென்மை சுவர்க்கத்திற்கு இட்டுச் செல்லும் பண்பாக இருப்பதால், அதனை விட்டும் ஒதுங்கி விடக்கூடாது. மாற்றமாக மென்மையை நடைமுறைப்படுத்துவதற்கு எமது உள்ளத்தோடு போறாட வேண்டும். அதுவே அல்லாஹ்வை நேசிப்பதையும், மனிதர்களை நேசிப்பதையும் வெளிப்படுத்துகிறது. மேலும் ஒரு அடியான் நல்லவர் என்பதற்கும், அவருடைய நற்குணத்திற்கு ஆதாரமாகவும் இம்மையிலும், மறுமையிலும் ஒரு அடியானின் சுபீட்சத்திற்கு அடையாளமாகவும் அமைந்து விடுகிறது.

அல்லாஹ்வின் அனுமதியின் படி, எமது வீடுகளில் அமைதி ஏற்படுவதற்கு எமது மனைவிமார்கள், பிள்ளைகள், பணியாளர்களுடன் நமது நடத்தைகளில் இப்பண்பை கவனத்தில் கொள்ள வேண்டும்.

## 10- பொருட்படுத்தாது விட்டு விடுவது

பொருட்படுத்தாது விட்டு விடுவது மன்னிப்பதை விட மேலான ஒன்றாகும். ஏனெனில் பொருட்படுத்தாது விட்டு விடுவது என்பது, குற்றத்தை முழுமையாக மன்னித்து, எதுவுமே நடைபெறவில்லை என்று கணிப்பதாகும். மன்னித்தல் என்பது, பாவத்தையும், பழித்தலையும் நீக்கி விடுவதை வேண்டி நிற்கிறது. கூலி கிடைப்பதை வேண்டிநிற்காது. அல்லாஹ் கூறுகின்றான்: அவர்கள் மன்னித்து, பொருட்படுத்தாது விட்டு விடட்டும். அல்லாஹ் உங்களுக்கு மன்னிப்பு வழங்குவதை நீங்கள் விரும்பமாட்டீர்களா? (24:22). மேலும் அல்லாஹ் கூறுகின்றான்: நம்பிக்கை கொண்டோரே! நிச்சயமாக உங்கள் மனைவியர்களிலும், உங்கள் பிள்ளைகளிலும் உங்களுக்கு விரோதிகள் இருக்கின்றனர். எனவே, அவர்கள் குறித்து, நீங்கள் எச்சரிக்கையாக இருங்கள். நீங்கள் சகித்து, பொருட்படுத்தாது மன்னித்தும் விட்டால் நிச்சயமாக அல்லாஹ் மிக்க மன்னிப்பவன். நிகரற்ற அன்புடையவன். (64:14).

ஆஇஷா (றழி) அவர்களிடம் நபிகளாரின் பண்புகள் பற்றி கேட்கப்பட்ட போது, பின்வருமாறு கூறினார்கள்: நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தீய பண்புடையவராகவோ, தீயதைச் செய்பவராக

வோ, கடைத் தெறுவுகளில் சத்தமிடுபராகவோ, தீங்கு செய்யதவருக்கு தீங்கு செய்பவராகவோ இருக்கவில்லை. எனினும் மற்றவர்களை மன்னித்து, பொருட்படுத்தாது விட்டுவிடுவார்கள். (திர்மிதி: 2016).

இவ்வழகிய பண்பு நமது மனைவிமார்களுடன் கடைபிடிப்பதற்கு மிகவும் சிறந்ததாகும். உங்கள் மனைவியிடம் விரும்பத்தகாத ஒரு வார்த்தை வெளிப்பட்டால், அல்லது உங்களுக்குரிய கடமையில் குறைவு செய்தால் நீங்கள் அதனைப் பொருட்படுத்தாது மன்னித்து, அழகிய முறையில் உபதேசம் செய்யுங்கள். உங்களுக்கு தீயதைச் செய்தால் நீங்களும் அவ்வாறு தீயதைச் செய்யாதீர்கள். மாற்றமாக அல்லாஹ்விடம் கூலியை எதிர்பார்த்து, கெடுதி செய்து விட்டால் நீங்கள் நல்லது செய்யுங்கள். நற்செயல் செய்பவரின் கூலியை அல்லாஹ் வீணாக்கமாட்டான். தவறுகளை மன்னித்து விட்டுக்கொடுப்பதினால் உங்கள் மனைவி நல்லவளாக மாறுவதை இறைவன் உதவியால் கண்டுகொள்வீர்கள். எனவே விட்டுக் கொடுத்தல் என்ற பண்பு முதலில் அல்லாஹ்வுக்கு வழிப்படுவ தாகும். பின்னர் நல்லறம் வேண்டி நிற்கும் ஒரு நற்செயலாகும். நல்லறம் ஈமானின் படித்தரத்தில் உயர்ந்த நிலையாகும். மேலும் விட்டுக்கொடுத்து,

மன்னித்தல் இம்மையிலும் மறுமையிலும் ஒரு மனிதனின் சுபீட்சத்துகுரிய காரணமாகும். மேலும் கணவன் மனைவி இருவரிடத்திலும் இருக்க வேண்டிய பண்பாகும்.

## 11- கண்டித்தலும், வெளிப்படைத் தன்மையும்

அபூ தர்தா. (றழி) அவர்கள் கூறுகின்றார்கள். ஒரு சகோதரனை குற்றத்திற்காக கண்டிப்பது, அவனை இழந்து விடுவதை விடவும் மேலானதாகும். எனினும் குறிப்பிட்ட சில சந்தர்ப்பங்களில் குறிப்பிட்ட அளவோடு கண்டித்தல் இருக்க வேண்டும். மாவர்தீ (ரஹ்) அவர்கள் கூறுகின்றார்கள்: ஒருவரை அதிகம் கண்டிப்பது உறவைத் துண்டிப்பதற்கு காரணமாக அமைந்து விடும்.

சில வேலை குடும்ப வாழ்வில் ஏதாவதொரு காரணத்தால் பிரச்சினைகள், கோபதாபங்கள் ஏற்படும் போது, ஒவ்வொருவரும் மென்மையாக, ஒளிவு மறைவின்றி தீர்வு காணும் போது, பிரச்சினைகள் நீங்கி விடும். பின்வரும் நபிகளாரின் நிலையை சிந்தித்துப் பாருங்கள். ஆஇஷா (றழி) அவர்கள்

கூறுகின்றார்கள்: நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்: நீங்கள் கோபமாக இருக்கும் போதும், கோபமில்லாமல் இருக்கும் போதும் நான் உங்களை அறிந்துகொள்வேன் என்றார் கள். எவ்வாறு நீங்கள் அறிகிறீர்கள் என நான் கேட்டேன். அதற்கு நபியவர்கள் நீங்கள் என்னைப் பொருந்திக் கொண்டால் முஹம்மதுடைய இரட்சகனின் மீது சத்தியமாக என்றும், நீங்கள் என்னுடன் கோபமாக இருந்தால் இப்ராஹீமின் இரட்சகன் மீது சத்தியமாக என்றும் கூறுவீர்கள் என்றார்கள். அதற்கு நான் அல்லாஹ்வின் தூதரே உங்கள் பெயரைத் தவிர உங்களை நான் வெறுக்கவில்லை என்றேன். ஆக தங்கள் இருவரின் உள்ளங்களில் உள்ளவற்றை வெளிப்படுத்திய போது, எப்படி நபியவர்கள் அழகான பதிலை வழங்கினார்கள். இதனால் அவர்கள் இருவரின் உள்ளங்களில் இருந்த கசப்புகள் நீங்கி விட்டதைச் சிந்தித்துப் பாருங்கள்.

மனதில் உள்ள பிரச்சினைகளை நேரடியாக கூறும் போது, உள்ளங்களிலே உள்ள கரைகளையும், வெறுப்புகளையும் போக்கி, அன்பையும், பாசத்தையும் ஏற்படுத்துகிறது. ஷைத்தானுடைய ஊசலாட்டங்க ளைப் போக்கி விடுகிறது. உள்ளங்களை வீணான சந்தேகங்களிலிருந்து தூய்மைப்படுத்துகிறது.

கணவனுக்கும் மனைவிக்குடையில் புரிந்தணர்வையும், அன்பையும் பலப்படுத்துகிறது. எனவே அன்பை நிலைபெறச் செய்கின்ற, நன்மையை ஏற்படுத்துகின்ற, குடும்ப பரிகாசம் கலந்த அழகான முறையில் குறைவாகவே கண்டித்தல் இருக்க வேண்டும்.

12- நல்லுபதேசம்

நல்லுபதேசம் என்பது, உபதேசம் செய்பவர், உபதேசம் செய்யப்படுகின்றவருக்கு செயலிலும், நாட்டத்திலும் மேற்கொள்கின்றவற்றை உள்ளடக்கு கின்ற பொதுவான வார்த்தையாகும். அல்லாஹ் கூறுகின்றான்: மேலும் நான் உங்களுக்கு நம்பிக்கைக்குரிய உபதேசியாவேன்.(7:68). நான் உங்களுக்கு உபதேசிக்கிறேன். (7:62). உபதேசம் என்பது, மனிதர்களில் சிலர் சிலருக்கு அல்லாஹ் வுக்கு வழிப்படும் படியும், அவன் தடுத்தவைகளை விட்டு விடும் படியும் உபதேசிப்பதாகும். அல்லாஹ் கூறுகின்றான்: சத்தியத்தைக் கொண்டு ஒருவருக் கொருவர் உபதேசித்து, இன்னும் பொறுமையைக் கொண்டு ஒருவருக்கொருவர் உபதேசித்தும் கொண்டிருந்தார்களே அவர்களைத் தவிர. (103:

3). ஜாபிர் (றழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: தொழுகையை நிலை நாட்டி, ஸகாத் கொடுத்து, ஒவ்வொரு முஸ்லிமுக்கும் உபதேசம் செய்வதாக நான் நபியவர்களுக்கு பைஅத் செய்தேன்.

(புகாரி: 1401, முஸ்லிம் 56).

முஸ்லிம்கள் தமக்கிடையில் ஒருவருக்கொருவர் உபதேசம் செய்து கொள்வது முக்கியமானதாகும். கணவனும் மனைவியும் இதற்கு மிகவும் அருகதையுடயவர்கள். இதன் மூலமே வாழ்க்கை நிலைபெறுகிறது. கோணல்கள் நேராகின்றன. குறைகள் மறைந்து, நல்லொழுக்கம் பரவி விடுகிறது. ஸ்தீரமான வாழ்வுக்கு வழிவகுத்து, இருவரையும் உயர்ந்த நிலைக்கு கொண்டு செல்கின்ற அன்பு தொடரந்து இருப்பதற்கு நல்லுபதேசம் காரணமாகும். மேலும் காலம் செல்வதற்கு முன் தம்பதிகளில் ஒருவர் மற்றவருக்கு எத்தி வைத்தோம் என்பதற்கு ஆதாரமாகவும் நல்லுபதேசம் உள்ளது. அத்தோடு அல்லாஹ் யாருக்கு உதவி செய்கிறானோ அவர் நல்லுபதேசத்தைக் கேட்டு, தவருகளை திருத்திக் கொள்வதற்கும் வாய்ப்பாக அமையும்.

# அமைதியான குடும்ப வாழ்க்கைக்கு தடையாக உள்ளவைகள்.

1- நவீன தொலைத் தொடர்பு சாதனங் களை பிழையாக உபயோகித்தல்.

இன்று நவீன தொலைத் தொடர்பு சாதனங்களால் பலர் பாதிக்கப்பட்டுள்ளனர். அவைகளில் நன்மை, தீமை இரண்டும் உள்ளன. இவைகளை பிழையாக உபயோகிப்பதால் பாரிய விளைவுகள் ஏற்படுகின்றன.

தொலைத் தொடர்பு சாதனங்களை பிழையாக பயன்படுத்துவதனால் எந்த அளவு விபரீதங்கள் ஏற்படுகின்றன என்பதை பின்வரும் வினாக்களைக் கேட்டால் அறிந்து கொள்ளலாம்.

1- தினமும் இந்த தொலைத் தொடர்பு சாதனங்களுடன் எவ்வளவு நேரத்தைக் கழிக்கிறார்?
2- அவர் படிக்கின்ற அல்லது பார்க்கின்ற நிகழ்ச்சிகள் யாவை?
3- இதனால் அவருடைய ஈமான் கூடியதா? அல்லது குறைந்ததா? அல்லாஹ்வுடைய நெருக்கத்தை ஏற்படுத்தியதா? அல்லது அல்லாஹ்வை விட்டும் தூரமாக்கியதா?
4- தனது இறைவனோடுள்ள தொடர்பில் அல்லது தனது பெற்றோர், மனைவி,

பிள்ளைகள் ஆகியோரோடுள்ள தொடர்பில் மோசமான விளைவை ஏற்படுத்தியதா?

மதிப்பிற்குரிய சகோதர, சகோதரிகளே! நேரடியாக, தெளிவாக பிரச்சினைகளை எடுத்துக் கூறுவது, தவருகளை திருத்திக்கொள்வதற்குரிய சரியான வழியாகும்.

உங்கள் செவியையும், பார்வையையும் விரும்பியதெல்லாம் கேட்பதற்கும், பார்ப்பதற்கும் விட்டு விட்டால் உங்களை வெறுக்கத்தக்க, மானக்கேடான செயல்களில் ஈடுபடச் செய்து விடும். மேலும் அது ஈமானின் பலவீனமாகும். அத்தோடு, நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் எச்சரிக்கை செய்த “அலட்சியம்” என்ற ஆபத்தான நோயை ஏற்படுத்தி விடும். அல்லாஹ் கூறுகின்றான்: அலட்சியம் செய்வோரில் நீரும் ஆகிவிட வேண்டாம். (8:205). இப்படியான நிலையில் மனிதன் படைப்பாளனுக்கு செய்ய வேண்டிய கடமைகளையும், பெற்றோர், மனைவி, பிள்ளைகள் போன்ற படைப்புகளின் கடமைகளையும் நிறைவேற்றுவதில் அலட்சியமாக இருந்து, அற்பமான விடயங்களில் ஈடுபட்டு விடுவான். மேலும் பாவங்களில் ஈடுபட்டு, நேரத்தை விணாக்கி, அழிந்து போகும்

இவ்வுலகத்தின் பக்கம் சாய்ந்து கிழ்த்தரமான நிலைக்கு சென்று விடுவான்.

அல்லாஹ் கூறுகின்றான்: தங்களது இரட்சகனின் (சங்கையான) முகத்தை நாடி காலையிலும், மாலையிலும் அவனை அழைப்போர்களுடன் (நபியே!) நீர் உம்மைக் கட்டுப்படுத்திக் கொள்வீராக! இவ்வுலக வாழ்வின் அலங்காரத்தை நீர் விரும்பி, அவர்களை விட்டும் உம்மிரு கண்களையும் திருப்பி விடாதீர். எம்மை நினைவு கூர்வதை விட்டும் எவனது உள்ளத்தை நாம் மறக்கடிக்கச் செய்து, அவன் தனது மனோ இச்சையைப் பின்பற்றி விட்டானோ அவனை நீர் பின்பற்றாதீர். மேலும், அவனது காரியம் வரம்பு மீறியதாகவே உள்ளது. (18:28). மேலும் மறுமையில் தனக்கும் தனது இரட்சகனுக்கும் இடையில் உள்ள உறுதியான சந்திப்பையும் மறந்து விடுவான்.

அல்லாஹ் கூறுகின்றான்: நிச்சயமாக எவர்கள் எமது சந்திப்பை ஆதரவு வைக்காது, இவ்வுலக வாழக்கையைப் பொருந்திக் கொண்டு, அதன் மூலம் மன நிம்மதி, அடைகின்றார்களோ அவர்களும், இன்னும் எவர்கள் எமது அத்தாட்சிகளை அலட்சியம் செய்கிறார்களோ அவர்களும் தாம் சம்பாதித்துக் கொண்டிருந்தவற்றின் காரணமாக நரகமே அவர்களின் ஒதுங்குமிடமாகும். (10:7-8).

## 2- பாவங்களில் அலட்சியமாக இருத்தல்

சிறிய பாவங்களை ஒன்றன் பின் ஒன்றாகச் செய்து பெரிய பாவங்களை செய்யுமளவுக்கு அலட்சியமாக இருப்பது குடும்ப வாழ்வில் பிளவுகள் ஏற்படுவதற்கு காரணமாக அமைந்து விடுகிறது. ஹஸனுல் பஸரீ (ரஹ்) அவர்கள் கூறுகின்றார்கள்: நிச்சயமாக பாவத்தின் விளைவை எனது பிரயாண மிருகத்திலும், மனைவியிடத்திலும் காண்பேன். ஆம் இவ்வாறுதான் ஸலபுகளான முன்னோர்கள் பாவங்கள் தமது குடும்ப வாழ்வில் தாக்கத்தை ஏற்படுத்துவதை பயந்தார்கள். எமது வீடுகளில் பாவங்களால் ஏற்படும் ஆபத்துகளை அறிந்து விட்டோமா? நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்: சிறிய பாவங்களை சாதாரணமாகக் கருதுவதை நான் உங்களுக்கு எச்சரிக்கிறேன். ஏனெனில் அவைகள் ஒன்று சேர்ந்து விட்டால் அவனை அழித்து விடும். (அஹமத்: 3818). பாவங்களில் அலட்சியமாக இருப்பது, அல்லாஹ்வுக்கும் அடியானுக்குமிடையில் தூரத்தை ஏற்படுத்தும். மனித, ஜின் ஷைத்தான்கள் அவன் மீது ஆதிக்கம் செலுத்தி, நற்செயல்கள் செய்வது சிரமமாகி, உள்ளத்தில் நெருக்கடியை ஏற்படுத்தி,

தனது வீட்டிலும் மற்றும் மனைவி பிள்ளைகளுடனும் நிம்மதியை இழக்கும் நிலையை ஏற்படுத்தும். அல்லாஹ் கூறுகின்றான்: எவன் எனது உபதேசத்தை புறக்கணிக்கின்றானோ நிச்சயமாக அவனுக்கு நெருக்கடியான வாழ்க்கை உண்டு. மேலும், நாம் அவனை மறுமை நாளில் குருடனாக எழுப்புவோம். (20:124).

3- குடும்ப வாழ்வில் கணவனின் குடும்பத்தினர் அல்லது மனைவியின் குடும்பத்தினர் தலையிடுதல்.

நிச்சயமாக இல்லற வாழ்க்கை உறுதியான உறவுகளில் கட்டியெலுப்பப்பட்டுள்ளது. அதற்கு இரு தூண்கள் உண்டு: அவையாவன, அன்பும் இரக்கமும் ஆகும். அல்லாஹ் கூறுகின்றான்: நீங்கள் மனைவியர்களிடம் அமைதி பெறுவதற்காக, உங்களில் இருந்தே உங்களுக்காக அவன் அவர்களைப் படைத்திருப்பதும், மேலும் அவன், உங்களுக்கிடையே அன்பையும் இரக்கத்தையும் ஏற்படுத்தியிருப்பதும் அவனது அத்தாட்சிகளில் உள்ளவையாகும். நிச்சயமாக இதில் சிந்திக்கும் சமூகத்திற்குப் பல அத்தாட்சிகள் இருக்கின்றன. (30:21).

இக்கட்டிடம் ஓட்டைகளிலிருந்து ஈடேற்றம் பெற்றால் உறுதியாகவே தொடர்ந்தும் இருக்கும். வெளித் தலையீடுகள் ஆரம்பிக்கும் போது, அந்த ஓட்டைகள் வெளிப்பட்டு, பின்னர் பிளவுகளும், பலவீனமும் ஏற்படும். இந்த வெளித் தலையீடுகள் குடும்ப உறவுகளின் பலத்தையும் எழுச்சியையும் அதிகரிக்கக் கூடியதாக, இடையில் ஏற்பட்ட ஓட்டைகளை அடைக்கக்கூடியதாக இருந்தாலே தவிர. அவ்வாறிருப்பின் அது அருள் மிக்கதாகும். எனவே கணவன், மனைவிக்கிடையில் கருத்து முரண்பாடு ஏற்படும் போது, அழகிய முறையில் இரகசியமாக தீர்த்துக்கொள்வதற்கு முயற்சிக்க வேண்டும். இதுவே பிரச்சினைகளுக்கு பரிகாரம் காண்பதற்கு அழகிய வழிமுறையாகும்.

## 4- ஆணின் வலிமையை பெண் குறைத்து மதிப்பிடுவது

மதிப்பிற்குரிய சகோதர சகோதரிகளே! ஒவ்வொரு விடயத்திற்கும் எல்லைகள் உண்டு, அதனைத் தாண்டி விட அனுமதிக்கக் கூடாது. எந்த ஒரு விடயத்தில் ஏவல் அல்லது விலக்கல் பற்றி அல்லாஹ்வின் திருமறை வசனம் அல்லது

நபிகளாரின் பொன்மொழி வந்துள்ளதோ அதனை ஒவ்வொரு முஸ்லிமான ஆணும் பெண்ணும் கேட்டோம் வழிப்பட்டோம் என்று ஏற்று விட வேண்டும். அல்லாஹ் கூறுகின்றான்: அவர்களிடையே தீர்ப்பளிக்க அல்லாஹ்விடமும், அவனது தூதரிடமும் அவர்கள் அழைக்கப்பட்டால் “செவியேற்றோம், கட்டுப்பட்டோம்” என்பதே நம்பிக்கையாளர்களின் வார்த்தையாக இருக்கும். அவர்கள் தாம் வெற்றியாளர்கள். (24:51). எவர்கள் அல்லாஹ்வுக்கும் அவனது தூதருக்கும் கட்டுப்பட்டு, அல்லாஹ்வைப் பயந்து, அவனை அஞ்சி நடக்கிறார்களோ அவர்கள்தாம் வெற்றியாளர்கள். (24:52). அல்லாஹ்வும், அவனது தூதரும் ஒரு காரியத்தில் முடிவு செய்து விட்டால் தமது காரியத்தில் சுய அபிப்பிராயம் கொள்வதற்கு மு.ஃ.மினான எந்த ஆணுக்கும் மு.ஃ.மினான எந்தப் பெண்ணுக்கும் உரிமை இல்லை. எவன் அல்லாஹ்வுக்கும் அவனது தூதருக்கும் மாறு செய்கிறானோ நிச்சயமாக அவன் மிகத் தெளிவான வழி கேட்டில் சென்று விட்டான்.

(33: 36).

ஆம் எங்கே அல்லாஹ்வின் கட்டளைகளுக்கும் விலக்கல்களுக்கும் கட்டுப்படுகிறோம். மேலும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள்

கூறியது போன்று, பெண் என்பவள் பலவீனமானவளாகவும், மார்க்க விடயத்திலும், பகுத்தறிவிலும் குறைவானவளாகவே கருதப்படுகிறாள். அவளுக்கு உறுதுணையாக இருந்து நேர்வழிப்படுத்தும் ஒருவரிடம் தேவையுடையவளாக இருக்கிறாள். பின்வரும் திருமறை வசனத்தை சிந்தித்துப்பார்:

பெண்களை நிர்வகிக்க ஆண்கள் தகுதியுடையோராவர்.அவர்களில் சிலரை மற்றும் சிலரை விட அல்லாஹ் சிறப்பித்திருப்பதாலும் (ஆண்களாகிய) அவர்கள் தமது செல்வங்களிலிருந்து செலவழிப்பதாலும் ஆகும். எனவே, நல்லொழுக்கமுள்ள பெண்கள் கட்டுப்பட்டு நடப்போராகவும், (கணவனில்லாது) மறைவாக இருக்கும் சமயத்தில் அல்லாஹ்வின் பாதுகாவல் கொண்டு தம்மைப் பாதுகாத்துக் கொள்வோராகவும் இருப்பர்.எவர்கள் கணவருக்கு மாறு செய்வார்கள் என்று நீங்கள் அஞ்சுகிறீர்களோ, அவர்களுக்கு உபதேசம் செய்யுங்கள். (அதிலும் திருந்தாவிட்டால்) அவர்களுக்கு (இலேசாக) அடியுங்கள். அவர்கள் உங்களுக்கு கட்டுப்பட்டால், அவர்களுக்கு எதிராக எந்த வழியையும் தேடாதீர்கள். நிச்சயமாக அல்லாஹ் உயர்ந்நதவனும், பெரியவனுமாக இருக்கிறான்.

( 4: 34).

## 5- புகைத்தல், போதை வஸ்த்து, மதுபானம் அருந்துதல் போன்ற தீய பழக்க வழக்கம்.

மனிதன் அறிந்தாலும் அறியாவிட்டாலும் அதிகமாக தீங்குகள் உள்ளவற்றையே நிச்சயமாக அல்லாஹ் ஹராமாக்கியுள்ளான். புகைத்தல் நல்லவைகளில் உள்ளதா? அல்லது தீயவைகளில் உள்ளதா? புகைத்தல் செல்வத்தைக் கூட்டுமா? குறைக்குமா? புகைப்பவரின் ஆரோக்கியமும், பலமும் கூடுமா? அல்லது குறையுமா? அதனால் ஏற்படும் தீங்கு அவரோடு நின்று விடுமா? அல்லது பிறருக்கும் செல்லுமா? .

மதிப்பிற்குறிய சகோதர சகோதரிகளே! மனிதன் இயல்பிலே நறுமணத்தை விரும்புபவனாக படைக்கப் பட்டிருக்கிறான். புகைத்தலின் துர்வாடையைச் சிந்தித்துப் பார்? இது மட்டுமள்ள மற்ற விடயம் இதனால் ஏற்படுகின்ற தீய நற்பு, தீய நண்பர்களோடு ஒன்று கூடுதல், பொருத்தமில்லாத வார்த்தைகளைப் பேசுதல் இவை அனைத்தும் குடும்ப வாழ்வில் தாக்கத்தை ஏற்படுத்தி விடும். புகைத்தலின் நிலை இவ்வாரிருக்க அல்லாஹ்வின் உதவியின்றி

பாவத்தை விடவும், நல்லதைச் செய்யவும் முடியாது. இதை விடவும் மிக ஆபத்தானதும், தடுக்கப்பட்டதும், கணவனுடைய பண்பாடுகளைக் கெடுத்தி? அவனின் வணக்கத்தையும், செல்வத்தையும் வீணாக்கி, தனது மனைவி, பிள்ளைகளை கவனிக்காமல் விட்டு விட வைக்கின்ற அதிகம் கெடுதியை ஏற்படுத்துகின்ற பாவச் செயல் போதை வஸ்து பாவனையாகும்.

மதிப்பிற்குரிய சகோதர சகோதரிகளே! இது போன்ற மார்க்கத்தில் தடுக்கப்பட்டவைகளைச் செய்வோரின் நிலையை கவனித்துப் பாருங்கள். அவர்கள் தமது பெற்றோர்கள், மனைவிமார்கள், பிள்ளைகள் ஆகியோருடன் எவ்வாறு நடந்து கொள்கின்றனர். நீதிமன்றங்களுக்கும், சிறைச்சாலைகளுக்கும் சென்று பாருங்கள். கவலையும், வேதனையும் தரக்கூடிய காட்சிகளைக் காண்பீர்கள். அந்த இடத்தில் அல்லாஹ்விடம் மன்னிப்பையும், ஆரோக்கியமான வாழ்வையும் கேட்பீர்கள். நீங்கள் இருக்கின்ற நல்ல நிலைக்கு அல்லாஹ்வைப் புகழ்வீர்கள்.

## 6- கோபம்

ஆபூஹுரைரா (றழி) அவர்கள் அறிவிக்கின்றார் கள்: ஒரு மனிதர் நபியவர்களிடம் வந்து, எனக்கு உபதேசம் செய்யுங்கள் என்று கூறினார். அதற்கு நபியவர்கள், நீ கோபப்படாதே என்று கூறினார்கள். மீண்டும், மீண்டும் உபதேசம் செய்யுமாறு கேட்க, நீ கோபப்படாதே என்று கூறினார்கள். (புகாரி 6116). கோபம் ஏற்படும் போது, பிறரை அடித்தல், பொருள்களை அழித்தல், மனைவி மற்றும் பிள்ளைகளை வீணாக்கி, சில வேலை கொலைக்குக் கூட இட்டுச் செல்கின்றது. இது போன்ற தீங்குகளை, ஆபத்துகளை அல்லாஹ்வைத் தவிர வேறு யாரும் அறியமாட் டார்கள்.

எவ்வாறு கோபத்தை தவிர்ந்து கொள்வது?

முதலாவது: ஷைத்தானை விட்டும் பாதுகாப்பத் தேடுவது. ஸுலைமான் பின் ஸர்த் (றழி) அவர்கள் கூறுகின்றார்கள்: நான் நபியவர்களோடு அமர்ந்து இருந்த போது, இருவர் ஒருவரை ஒருவர் ஏசிக் கொண்டிருந்தனர். ஒருவரின் முகம் சிவந்து, அவருடைய கழுத்தின் நரம்புகள் கோபத்தால்) பெரிதாகி இருந்தது. அப்போது நபியவர்கள், நிச்சயமாக நான் ஒரு வார்த்தையை அறிவேன்.

அதனைக் கூறினால் அவரின் கோபம் நீங்கி விடும் என்று கூறிவிட்டு, அஊது பில்லாஹி மினஷ் ஷைதானிர் ரஜீம் என்று கூறினால் அவரின் கோபம் நீங்கி விடும் என்று கூறினார்கள். (புகாரி: 6115, முஸ்லிம் 2610).

இரண்டாவது: கோபம் வரும் போது, நின்றிருந்தால் அமர்வது. அமர்ந்திருந்தால் படுப்பது. மேலும் அஊது பில்லாஹி மினஷ் ஷைதானிர் ரஜீம் என்று கூறு. தான் இருக்கும் இடத்தை மாற்றிக்கொளளுதல். வுழு செய்துகொள். இரண்டு ரக்அத்துகள் தொழுகையை நிறைவேற்றுதல் போன்றவையும் தனது கொபத்தை அடக்கிக் கொள்வதற்குரிய வழி முறைகளாகும்.

மூன்றாவது: மன்னிப்பதன் சிறப்பு பற்றி வந்திருக்கின்ற ஹதீஸ்களையும், அதற்கு அல்லாஹ்விடம் உள்ள கூலிகளையும் ஞாபகப்படுத்திக்கொள்வதாகும்.

## 7- பொய் பேசுதல்

அல்லாஹ் கூறுகின்றான்: நம்பிக்கை கொண்டோரே! அல்லாஹ்வை அஞ்சிக்கொள்ளுங்கள். மேலும் உண்மையாளர்களுடன் இருந்து

கொள்ளுங்கள். (9:119). நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதாக அப்துல்லாஹ் பின் மஸ்ஊத் (றழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: நிச்சயமாக பொய் பாவத்தின் பக்கம் வழிகாட்டுகிறது. பாவம் நரகத்தின் பக்கம் வழிகாட்டுகிறது. (புகாரி: 6094, முஸ்லிம் 2607). சில கணவன்மார்கள் மனைவிக்கு பொய் கூறலாம் என தவறாக விளங்கி, வாழ்க்கை முழுவதும் தனது மனைவிக்கு பொய்யே கூறுகின்றனர். பொய் கூறி வாழ்கின்ற வாழக்கையில் நிம்மதி, அமைதி இருக்காது. இதற்கு மாற்றமாக அவர்களின் வாழ்வில் குழப்பமும், சந்தேகங்களும், தீய எண்ணங்களும் ஆட்கொண்டிருக்கும். இவை அனைத்திற்கும் காரணம் கணவன் மனைவிக்கிடையில் நம்பிக்கையின்மை யாகும். பொய் கூறுவதால் குடும்ப வாழ்க்கை துன்பம், சிக்கல் கோபம் நிறைந்ததாக மாறி விடும். எனது சகோதர கணவரே! நீ அல்லாஹ்வோடும் மக்களோடும் நேர்மையாக நடந்துகொள். அப்போது, உனக்கும் உனது மனைவிக்கும் இடையில் அன்பு, பிணைப்பு ஏற்படும்.

8- வீட்டுப் பிரச்சினைகளை பிறரிடம் கூறுவது.

வீட்டில் நடக்கின்றவைகளை வீட்டுக்கு வெளியே இருப்பவர்கள் அறியாதவாறு குடும்ப வாழ்க்கைக்கு சில திரைகள் இருக்கின்றன. எமது வீட்டுப் பிரச்சினையில் பிறர் தலையிட இடமளிக்கக் கூடாது. தற்காலத்தில் வாயால் மாத்திரம் பிரச்சினைகளைக் கூறுவதில்லை. அதையும் தாண்டி, நவீன தொலைத் தொடர்பு சாதனங்களின் மூலமாக செய்யாததைப் படம் பிடித்து, இல்லாததை அலங்கரித்து காட்டும் நிலைக்கு மாறியுள்ளது.

வீட்டுப் பிரச்சினைகைளை மக்களிடம் கூறுவதால் பயனடைபவர் யார்? தமக்கே இதனால் தீங்கு ஏற்படும். அனுமதியின்றி நபிகளாரின் வீட்டை எட்டிப் பார்த்தவரோடு நபியவர்கள் எவ்வாறு நடந்து கொண்டார்கள் என்பதை கவனித்துப் பாருங்கள். ஸஹ்ல் பின் ஸ.்.த் அஸ்ஸாஇதிய்யி (றழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஒருவர் நபிகளாரின் ஓர் அறையை எட்டிப் பார்த்தார். அப்போது, நபியவர்கள் சீப்பு போன்ற ஒன்றால் தலையை சொரிந்து கொண்டிருந்தார்கள். அதற்கு நபியவர்கள், நீங்கள் பார்ப்பதை நான் கண்டிருந்தால் உங்கள் கண்ணிலே குத்தியிருப்பேன் என்று கூறிவிட்டு, பார்க்கக் கூடாத

ஒன்றை பார்த்து விடக் கூடாது என்பதற்காகவே அனுமதி பெறுவது ஏறடுத்தப்பட்டுள்ளது என்று கூறினார்கள். (புகாரி: 6241, முஸ்லிம் 2156). மேலும் உமர் (றழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: யார் அனுமதி பெறுவதற்கு முன்பு வீட்டினுள் பார்த்து விடுகிறாரோ அவர் பாவம் செய்து விட்டார். பார்க்கக் கூடாத ஒன்றை பார்த்து விடக் கூடாது என்பதற்காகவே அனுமதி பெறுவது ஏற்படுத்தப்பட்டுள் ளது என்று நபியவர்கள் கூறினார்கள். இந்தத் தண்டனை வீடு மற்றும் வீட்டிலே உள்ள மறைவானவைகளைப் பாதுகாப்பதற்காகவும் ஏற்படுத்தப்பட்டுள்ளது எனில் வீட்டு பிரச்சினைகளை மக்களிடம் கூறுபவரின் நிலையை என்னவென்று சொல்வது.

எமது பிரச்சினைகளைப் பற்றி பிறர் கதைப்பதற்கு நாமே அனுதி வழங்குவது எவ்வாறு நமக்கு பொருத்தமானது. நாம் வெட்கப்படக் கூடாதா? அல்லாஹ்வை அஞ்சக் கூடாதா? பொறாமைக்காரரர் களின் பார்வையிலிருந்தும், பேச்சிலிருந்தும் நாம் எச்சரிக்கையாக இருக்கக் கூடாதா? பிரச்சினைகளை வெளியில் கூறுவதால் குடும்பங்களுக்கு மோசமான விளைவுகளை ஏற்படுத்துவதோடு, அதனால் பொறாமை, பிரச்சினை, சண்டை சச்சரவுகள்

ஏற்படுவதோடு பின்னர் அவைகள் விவாகரத்தில் கொண்டு போய்ச் சேர்க்கும். அல்லாஹ் போதுமானவன்.

## 9- தீய எண்ணம்

அல்லாஹ் கூறுகின்றான்: நம்பிக்கை கொண்டோரே! எண்ணங்களில் அதிகமானதைத் தவிர்ந்து கொள்ளுங்கள். நிச்சயமாக எண்ணங்களில் சில பாவமாகும். மேலும், துருவித்துருவி ஆராயாதீர்கள். இன்னும், உங்களில் சிலர் மற்றும் சிலரைப் புறம் பேசவும் வேண்டாம். உங்களில் எவரேனும் இறந்த தனது சகோதரனின் மாமிசத்தை உண்ண விருட்புவாரா? அதை நீங்கள் வெறுத்து விடுவீர்கள். மேலும், அல்லாஹ்வை அஞ்சிக்கொள்ளுங்கள். நிச்சயமாக அல்லாஹ் மிக்க மன்னிப்பவன். நிகரற்ற அன்புடையவன். (49:12). நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்: தீய எண்ணம் வைப்பதை உங்களுக்கு நான் எசச்சரிக்கை செய்கிறேன். ஏனெனில் தீய எண்ணம் பேச்சுகளில் பொய்யானதாகும். (புகாரி, முஸ்லிம்). இப்னு குதாமா (ரஹ்) அவர்கள் கூறுகின்றார்கள்: உறுதியாக ஒரு விடயம்

வெளிப்பட்டாளன்றி, ஒரு முஸ்லிமைப் பற்றி தவறான எண்ணம் வைக்கக் கூடாது. முஸ்லிம்களைப் பற்றி தவறாக நினைப்பது பெரும்பாவங்களில் ஒன்றாகும். அல்லாஹ் கூறுகின்றான்: அவர்கள் வெறும் யூகத்தையே பின்பற்றுகின்றனர். நிச்சயமாக யூகம் உண்மைக்கு எந்தப் பயனும் தராது. (53: 28).

முஸ்லிம்கள் தமக்கிடையில் நல்லெண்ணம் வைப்பது, குறிப்பாக கணவன் மனைவிக்கிடையில் பரஸ்பர நல்லெண்ணம் இருப்பது அவசியமானதாகும். ஏனெனில் பிறரைப் பற்றி யூகம் வைப்பது, கோபத்தையும், வெறுப்பயையும் ஏற்படுத்தும். நம்பிக்கயின்மைக்கு ஆதாரமாகும். பல தீமைகளுக் கும், மோசமான முடிவுகளுக்கும் வாயிலாகும். கணவன் மனைவிக்கிடையில் ஏற்படுகின்ற தீய எண்ணம் நம்பிக்கையின்மையை ஏற்படுத்தி, அனைத்து செயல்களையும் தீய எண்ணத்தோடு பார்க்க தூண்டி விடும். இறுதியில் இருவருக்கிடையில் பிரிவை ஏற்படுத்தி விடும். இதனால் தீய எண்ணம் வைப்பதை எச்சரிக்கை செய்கிறேன். நல்ல எண்ணம் வைக்குமாறு வேண்டுகிறேன்.

## 10- குடும்ப வாழ்வில் துரோகம்.

தமது மர்மஸ்தானங்களைப் பாதுகாத்துக்கொள்ளு மாறும் ஹராத்தை விட்டும் தவிர்த்துக் கொள்ளுமாறும் கட்டளையிடுவதோடு, தடுக்கப்பட்டதைப் பார்ப்பதன் மூலம் குடும்ப துரோகத்திற்கு இட்டுச் செல்கின்ற வழிகளை விட்டும் எச்சரிக்கை செய்கிறான். அல்லாஹ் கூறுகின்றான்: நம்பிக்கையாளர்களான ஆண்களிடம் அவர்கள் தமது பார்வைகளைத் தாழ்த்திக்கொள்ளுமாறும் தமது கற்புகளைப் பாதுகாத்துக்கொள்ளுமாறும் (நபியே!) நீர் கூறுவீராக. இதுவே அவர்களுக்கு மிகப் பரிசுத்தமானதாகும். (24: 30). (நபியே) நம்பிக்கையாளர்களான பெண்களிடம் அவர்கள் தமது பார்வைகளைத் தாழ்த்திக் கொள்ளுமாறும், தமது கற்புகளைப் பாதுகாதுக் கொள்ளுமாறும், அவர்களது அலங்காரத்தில் வெளிப்படுவதைத் தவிர வேறு எதையும் அவர்கள் வெளிப்படுத்தக் கூடாது என்றும், தமது முந்தானைகளை தமது மார்பகங்கள் மீது போட்டுக் கொள்ளுமாறும் (நபியே!) நீர் அவர்களுக்குக் கூறுவீராக (24:31).

அல்லாஹ் தடுத்தவைகளைப் பார்ப்பதே தீமையின் ஆரம்பமாகும். பார்வையை தாழ்த்துவதால்

ஏற்படுகின்ற பயன்களை சிந்தித்தால் ஆச்சரியத்தைக் காணலாம்:

1- அல்லாஹ் வைத்துள்ள மிக இனிமையான ஈமானிய சுவை, ஈமானிய இண்பம் அதிலே உண்டு.
2- உள்ளத்தின் பிரகாசம் அதில் உண்டு. இதனால் அந்நூர் அத்தியாயத்தில் பார்வையைத் தாழ்த்துவது பற்றிய வசனங்களின் பின் அல்லாஹ் பிரகாசத்தைப் பற்றி குறிப்பிடுகிறான்: அல்லாஹ் வானங்கள் மற்றும் பூமியின் பிரகாசமாவான். (24:35).
3- பலமான, உறுதியான, வீரம்மிக்க உள்ளம். இதனால் அல்லாஹ் அவருக்கு பார்வையின் ஆதிக்கத்தை ஏற்படுத்துகிறான்.
4- தனது உள்ளத்தில் ஏற்படுகின்ற பிரகாசத்தை அல்லாஹ் அவருக்கு இனிமையாக மாற்றிக் கொடுக்கிறான்.
5- பார்வையைத் தாழ்த்துவதால் அல்லாஹ்வுக்கும் அவனது தூதருக்கும் வழிப்படுகிறான். இதனால் சுவனத்தில் நுழைவிக்கின்ற அல்லாஹ்வின் நேசம் அவனுக்குக் கிடைக்கிறது.

6- பார்வையைத் தாழ்த்துவதால் உடலுக்கும், உள்ளத்துக்கும் அமைதி கிடைக்கிறது.
7- இரத்த உறவினர்களைப் பாதுகாத்து, பாவத்தில் விழுந்து விடாமல் பாதுகாக்கிறது.
8- இந்தப் பண்பைப் பெற்றிருக்கின்ற சமூகத்தை பாதுகாப்பான விருப்பத்திற்குரிய சமுதாயமாக மாற்றி விடுகிறது.
9- ஷைத்தானுக்கும், அவனின் உவியாளர்களுக்கும் தீங்கை ஏற்படுத்தி, அவருக்கு பத்தினித் தன்மையை ஏற்படுத்துகிறது.

மனிதன் அல்லாஹ் தடுத்தவைகளைப் பார்ப்பதற்கு தனது கண்ணை விட்டு விட்டால் அல்லாஹ் தடுத்தவைகளைச் செய்வதற்கு ஷைத்தானுடைய அடிச்சுவடு ஆரம்பமாகி விட்டது. இதனை இமாம் இப்னுல் கையிம் (ரஹ்) அவர்கள் தனது பவாஇத் என்ற நூலில் குறிப்பிடுகின்றார்கள். மனதில் வரும் ஊசலாட்டத்தைத் தடுத்து விடு. தடுக்காவிட்டால் அது சிந்தனையாக மாறி விடும். தீய சிந்தனையைத் தடுத்து விடு. தடுக்காவிட்டால் அது மனோ இச்சையாக மாறி விடும். மனோ இச்சையோடு போராடு. அவ்வாறு போராடாவிட்டால் அது

உறுதியான முடிவாக மாறி விடும். அதனைத் தடுக்காவிட்டால் அது செயல்வடிவமாக மாறி விடும். அதனை விட்டுவிட்டு நல்லதைச் செய்யா விட்டால் தீய செயல் வழமையானதாக மாறி, அதனை விட்டு விடுவது சிரமமாகி விடும்.

ஒருவர் தனது மனோ இச்சைக்கு கட்டுப்பட்டு, தடுக்கப்பட்டதைப் பார்த்து, அந்நிய பெண்களுடன் மென்மையாகப் பேசுவது போன்றவற்றைச் செய்வதன் மூலம் அல்லாஹ்வின் எல்லைகளைத் தாண்டி, சில வேலை அந்நியப் பெண்களைப் பார்த்து, அவர்களுடன் கதைத்து, பின்னர் அவர்களுடன் சந்தித்து விடுவதனால் திருமணத் துரோகத்தைச் செய்யும் அளவுக்கு முனைந்து விடுவார். பின்னர் குடும்பங்கள் பிளவுபட்டு, அழிவு ஏற்பட்டு. நிலையான திருமண உறவை முறித்து, மக்களுக்கிடையில் இழிவான நிலைக்கு கொண்டுபோய்ச் சேர்க்கும்.

தம்பதிகள் இருவரும் குடும்பத்தில் மகிழ்ச்சியை ஏற்படுத்துகின்ற கருமங்களை செய்வதுடன், கீழ்த்தரமான கருமங்களை விட்டும் தூரமாக இருக்க வேண்டும். சிறிய அல்லது பெரிய எந்தத் தவறுகள் ஏற்படுவதற்கு முன் கணவன் மனைவியின் விவேகத்தாலே அந்த வாயில்களை மூடி விட முடியும்.

விவேகமுள்ள பெண் தன்னையும், தனது வீட்டையும், தனது பிள்ளைகளையும் அழகாக வைத்துக் கொள்வாள். கணவன் வீட்டில் நுழையும் போது, தான் விரும்புவது போன்று வீடு இருக்கும். தடுக்கப்பட்டவைகளை விட்டும் தனது பார்வையைத் தாழ்த்திக் கொள்வார். இவற்றை நாம் புரிந்து கொள்கின்றோமா? சில பெண்கள் தனது கணவனுக்கு செய்ய வேண்டடிய கடமைகளை அல்லது வீட்டு வேலைகளை சரியாக நிறைவேற்றாத போது பிரச்சினைகள் ஏற்படுகின்றன. அத்தோடு மார்க்கக் கடமைகளை சரியாக நிறைவேற்றாத போது, சைத்தானுடைய அடிச்சுவடுகள் ஆரம்பமாகி விடுகிறது. இதனால் தம்பதிகள் ஒவ்வொருவருக்கும் நான் கூறுவது என்னவெனில், கடமையான, நபிலான தொழுகைகைள், திக்ருகள், போன்றவற்றை சரியாக கடைபிடித்து, அல்லாஹ் தடுத்தவைகளை விட்டும் பார்வையைத் தாழ்த்திக் கொள்ளும் படி வேண்டுகிறேன்.

மனைவி இவைகளில் தனது கடமைகளை சரியாக நிறைவேற்றா விட்டால் கணவன் அல்லாஹ் ஹலாலாக்கிய எல்லலைகளைத் தாண்டி விட முடியும் என்ற பொருள் அல்ல. எச்சந்தர்ப்பத்திலும் ஒரு போதும் அவ்வாறு செயற்பட முடியாது. அல்லாஹ்

மார்க்கத்தில் அனுதிக்கப்பட்ட வழிகளின் மூலம் பிரச்சினைகளுக்கான தீர்வை வைத்திருக்கிறான். யார் அல்லாஹ்வின் கட்டளைகளை பேணி நடக்கிறாரோ அல்லாஹ் அவரைப் பாதுகாக்க பொறுப்பெடுக்கிறான்: நபியவர்கள் கூறினார்கள். (சிறுவனே! அல்லாஹ்வின் கட்டளைகளைப் பேணி நட. அல்லாஹ் உன்னைப் பாதுகாப்பான்.

(திர்மிதி 2516).

எனவே தம்பதிகள் ஒவ்வொருவரும் அல்லாஹ்வுடைய கட்டளைகளை பேணி நடக்குமாறும், அவன் தடுத்தவைகளை தவிர்ந்து நடக்குமாறும் ஒருவருக்கொருவர் உபதேசிப்பதில் கவனமெடுப்பதும், ஒருவர் மற்றவருக்குச் செய்ய வேண்டிய கடமைகளை அறிந்து நிறைவேற்றுவதும் அவசியமாகும். இதன் மூலமே உண்மையான நிம்மதி ஏற்படும். தம்பதிகள் இருவரின் வாழக்கையையும் வீழ்ச்சியிலும் அழிவிலும் கொண்டுபோய் சேர்க்கின்ற ஆபத்தான பிரச்சினைகளிலிருந்து தூரமாகக்கி விடும். அல்லாஹ்வின் உதவியின்றி நன்மையைச் செய்யவோ பாவத்தை விட்டு விடவோ முடியாது.

# எச்சரிக்கைகளும், சட்டதிட்டங்களும்

## விவாகரத்து செய்வதற்கு முன் அறிய வேண்டிய சட்டதிட்டங்களும், எச்சரிக்கைகளும்.

1- விவாகரத்து பாரதூரமானது. அதில் கவனயீனமாக ஈடுபட்டு விடக் கூடாது.

விவாகரத்து என்பது பிரச்சினைகளைத் தடுப்பதற்கும், அதற்கான பரிகாரம் காண்பதற்கும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. அல்லாஹ் கூறுகின்றான்: நீங்கள் (உங்கள்) மனைவியர்களை (மீளக்கூடிய) தலாக் கூறி அவர்களின் (இத்தா) காலக்கெடுவின் எல்லையை அவர்கள் நெருங்கி விட்டால், அவர்களை உரிய விதத்தில் வைத்துக் கொள்ளுங்கள். அல்லது நல்ல முறையில் அவர்களை விட்டு விடுங்கள். (மாறாக) வரம்பு மீறி அவர்களைத் துன்புறுத்துவதற்காக அவர்களை உங்களிடம் வைத்துக் கொள்ளாதீர்கள். இவ்வாறு யார் செய்கிறாரோ நிச்சயமாக அவர் தனக்கே அநியாயாம் செய்து கொண்டார். அல்லாஹ்வின் வசனங்களைக் கேலியாக எடுத்துக் கொள்ளாதீர்கள். உங்கள் மீதுள்ள அல்லாஹ்வின் கொடையையும் உங்கள் மீது

அவன் இறக்கிய வேதத்தையும் ஞானத்தையும் நினைவு கூறுங்கள். அதன் மூலம் உங்களுக்கு அவன் உபதேசிக்கிறான். இன்னும் அல்லாஹ்வை அஞ்சிக் கொள்ளுங்கள். நிச்சயமாக அல்லாஹ் யாவற்றையும் நன்கறிந்தவன் என்பதையும் நீங்கள் அறிந்து கொள்ளுங்கள். ( 2:231) . அஷ்ஷெய்க் ஸஃதி (ரஹ்) அவர்கள் தனது தப்ஸீரில் கூறுகின்றார்கள்: அல்லாஹ் அவனின் வசனங்களை வீணுக்காக இறக்கவில்லை. சத்தியத்தைக் கொண்டும், உண்மையைக் கொண்டும் இறக்கி வைத்தான். அவைகளை விளையாட்டாக எடுப்பதை தடை செய்கிறான். அதாவது மனைவியை வைத்துக் கொள்வதில் அல்லது பிரித்து விடுவதில் அவளுக்கு தீங்கிழைத்தல் அல்லது அதிகமாக விவாகரத்து செய்வதின் மூலமும் அல்லது மூன்று தலாக்கை ஒரே நேரத்தில் கூறுவதன் மூலமும் அவளுக்கு தீங்கிழைத்தலாகும். கணவனின் மீது கொண்ட இரக்கத்திற்கும், அவனின் நன்மைக்கும் அல்லாஹ் விவாகரத்தை ஒன்றுக்குப் பின்னால் ஒன்றை வைத்திருக்கிறான். சிலர் அற்ப காரணித்திற்காகவும் விவாகரத்து செய்து விடுகின்றனர். மேலும் தனக்கும் மனைவிக்கும் இடையில் ஏற்படுகின்ற பிரச்சினையின் ஆரம்பத்திலே விவாகரத்து செய்து விடுகின்றனர். மற்றும் சிலர் மாதவிடாய் காலத்தில் அல்லது

உடலுறவில் ஈடுபட்ட சுத்தமான காலத்தில் விவாகரத்து செய்து விடுகின்றனர். இவை அனைத்தும் தடுக்கப்பட்டதும், அல்லாஹ்வின் வரம்புகளை மீறுவதும் ஆகும். இன்று சிலர் கோபப்பட அவசியமில்லாத விடயத்தில் கோபப்பட்டு, கொந்தளிப்பான நேரத்தில் விவாகரத்து செய்து விட்டு கைசேதப்படுகின்றனர். பின்னர் மார்க்க அறிஞர்களை தேடிச் செல்கின்றனர். மேலும் தான் செய்த தவறுக்கு தீர்வைப் பெறுவதற்காக நீதி மன்றங்களையும் தேடிச் செல்கின்றனர். அல்லாஹ்வின் வரம்புகளைத் தாண்டாமல் அவனின் கட்டளைப்படி வாழ்ந்திருந்தால் அத்தவறை செய்திருக்கமாட்டார்.

இன்னும் சிலர் அனைத்து விடயங்களுக்கும் விவாகரத்து வார்த்தையை மொழிந்து விடுகின்றனர். சத்தியம் செய்வது போன்றவற்றுக்குப் பதிலாக அற்ப விடயத்திற்கும் இதனைக் கூறுகின்றனர். தன்மீதோ பிறர்மீதோ சத்தியம் செய்ய நாடும் போது, சத்தியமாக நான் விவாகரத்து செய்து விடுவேன் என்று கூறி விட்டு, சத்தியம் முறிந்து விட்டால் பிரச்சினையில் மாட்டிக் கொள்கிறார். சத்தியம் செய்து விவாகரத்து செய்வதாக கூறியதற்கு பரிகாரம் தேட முற்படுகின்றனர். எமது நாடுகளில் விவாகரத்து பயங்கரமான கட்டத்தை அடைந்துள்ளது. வருடாந்தம்

30 ஆயிரத்திற்கும் அதிகமான யுவதிகளை கவலையான நிலைக்கு தள்ளி விடுகிறோம். ஆயிரக் கணக்கான சில வேலை அதை விடவும் அதிகமாக குழந்தைகளை சின்னாபின்னமாக்கி விடுகிறோம்.

கணவன்மார்களே! இது போன்ற மனிதர்களிடம் குடும்பப் பொறுப்பு இழிவாகிவிட்டதா? எந்த அளவுக்கு எனில் குடும்பப் பிரச்சினைக்கான தீர்வை சொற்பநேரம் அமர்ந்து செல்வதாகக் கூறும் ஒரு விருந்தாளியிடம் ஒப்படைப்பதைப் போன்றல்லவா இருக்கிறது.

எனது சகோதர கணவரே! தலாக் அத்தியாயத்தை பல முறை வாசிப்பீராக. இறையச்சத்தைப் பற்றியும், அல்லாஹ்வின் வரம்புகள் பற்றியும், மறுமை நாள் பற்றியும் எத்தனை நல்லுபதேசங்கள் கூறப்பட்டுள்ளன என்பதை சிந்தித்துப் பார். ஏன் இந்த நல்லுபதேசங்கள் எல்லாம் கூறப்படுகின்றன. திருமண ஒப்பந்தம் ஒரு பாரிய சங்கைக்குரிய ஒப்பந்தம். அதில் அலட்சியம் செய்யக் கூடாது என்பதை எடுத்துக் காட்டுகிறது. அல்லாஹ் கூறுகின்றான்: அவர்கள் உங்களிடம் உறுதியான உடன்படிக்கையை எடுத்துள்ளனர். (4:21). இது மாத்திரமல்ல விவாகரத்தை அல்லாஹ்வுடைய எல்லைகளில் ஒன்றாக அவன் குறிப்பிட்டுள்ளான்.

2- நடுவர்கள் பற்றி அல்லாஹ் நமக்கு ஏவியவற்றைக் கவனிக்க வேண்டும். அல்லாஹ் கூறுகின்றான்: இன்னும் அவ்விருவருக்குமிடையில் பிளவை நீங்கள் அஞ்சினால், அவனது குடும்பத்திலிருந்து ஒரு நடுவரையும், அவளது குடும்பத்திலிருந்து ஒரு நடுவரையும் (சமாதானம்) செய்ய அனுப்புங்கள். இவ்விருவரும் (அவர்களுக்குள்) நல்லினக்கத்தை விரும்பினால் அல்லாஹ் அவ்விருவருக் குமிடையில் இணக்கத்தை ஏற்படுத்து வான். நிச்சயமாக அல்லாஹ் நன்கறிந்தவனாகவும் மிக நுட்பமானவனாகவும் இருக்கிறான். (4:35). நடுவர்களின் தலையீட்டினால் தம்பதியர்களுக்கு எத்தனையோ நன்மைககள் ஏற்பட்டுள்ளன.

3- ஊர்களிலே உள்ள சமாதானம் செய்து வைக்கும் நிலையங்கள் மற்றும் நீதிமன்றங்களில் உள்ள சமாதான காரியாளயங்கள் மூலம் மேற்கொள்கின்ற முயற்சிகளால் பயனடைவது.

4- தம்பதிகள் இருவருக்கும் நலவை ஏற்படுத்தும் விடயத்தில் பெற்றோர்கள், சகோதரர்கள், உறவினர்கள், தமது பெண் பிள்ளைகள், சகோதரிகள் ஆகியோரை விட்டு விடாமல் இருப்பதும், விவாகரத்துக்கு முன்பும் பின்பும் அவர்களுக்கு துணையாக இருப்பதும் அவசியமாகும்.

5- சுய பரிசோதனை. பிரச்சினைக்கான காரணம், சிலவேலை நீ அவளுடன் நடந்து கொள்கின்ற மோசமான நடத்தையும், கடிணமான தன்மையும், உனது மனைவிக்குரிய கடமைகளை சரியாக நிறைவேற்றாததும் காரணமாக இருக்கலாம். எனவே நீ திறந்த மனதுடன் சிந்தித்துப் பார். அப்போது உண்மை வெளிப்படும்.

6- ஆலோசனை செய்தல். கணவன் தகுதியானவர்களுடன் ஆலோசனை செய்ய வேண்டும். அல்லாஹ் கூறுகின்றான்: இன்னும் அவர்கள், தமது இரட்சகனுக்கு பதிளலித்து, தொழுகையையும் நிலைநாட்டுவார்கள். தமது காரியங்களைத் தமக்கிடையே

கலந்தாலோசனை செய்வார்கள். மேலும் நாம் அவர்களுக்கு அருளியவற்றிலி ருந்து (நல்லறங்களில்) செலவும் செய்வார்கள்.(42:38). மேலும் அல்லாஹ் கூறுகின்றான்: காரியங்களில் அவர்களு டன் ஆலோசனையும் செய்வீராக! (3:159).

7- இஸ்திகாரா தொழுது பிரார்த்திப்பது. அதாவது இரண்டில் நல்லதை வேண்டுவது. ( குர்ஆனில் ஸூராக்களை நமக்கு கற்றுத் தந்தது போல் நபியவர்கள் நமது எல்லாக் கருமங்களிலும் இஸ்திகாராவை கற்றுத் தந்துள்ளார்கள்.) இஸ்திகாரா தொழுவதோடு ஆலோசனைகளை மேற்கொள்வதும் சிறந்ததாகும். தொழுது விட்டு, பிரார்த்தனை செய்வது நபி வழியைப் பூரணமாகப் பின்பற்றுவதாகும்.

## விவாகரத்து செய்வதற்கு முடிவு செய்யும் போது...

முன்கூறப்பட்ட உபதேசங்கள் அனைத்தையும் கணவன் கடைபிடித்தும் நிலமை சீராகா விட்டால் எல்லாத் தீர்வுகளும் தோல்வியில் முடிந்தால் இறுதி முடிவாக அல்லாஹ் விவாகரத்தை வைத்துள்ளான். அவ்விருவரும் பிரிந்து விட்டால் ஒவ்வொருவரையும் அல்லாஹ் தனது தாளாரத்தன்மையால் (மற்றவரை) விட்டும் தேவையற்றவராக ஆக்கிவிடுவான். அல்லாஹ் விசாலமானவனாகவும், ஞானமிக்கனாகவும் இருக்கிறான். (4 130)

கணவன் தனது மனைவியை விவாகரத்து செய்ய நாடினால் உடலுறவில் ஈடுபடாத சுத்தமான காலத்தில் ஓரு தலாக் (விவாகரத்து) செய்ய வேண்டும். அல்லாஹ் கூறுகின்றான்: நபியே! நீங்கள் பெண்களை விவாகரத்துச் செய்தால் அவர்களின் இத்தாவைக் கணக்கிடக்கூடிய (மதவிடாய் இல்லாத) காலத்தில் விவாகரத்துச் செய்யுங்கள். ( 65 : 1). அதாவது உடலுறவில் ஈடுபடாத சுத்தமான காலத்தில் அவளை விவாகரத்து செய்ய வேண்டும். ஏனெனில் மாதவிடாய் காலத்திலும், உடலுறவில் ஈடுபட்ட சுத்தமான காலத்திலும் விவாகரத்து செய்யக் கூடாது.

அவளுக்கு குழந்தை தரித்து விட்டது என்பது உறுதியானால் அப்போது அவளை விவாகரத்து செய்யலாம்.

## விவாகரத்து செய்த பின் எவ்வாறு நடந்துகொள்வது.

மனைவி அவளது கணவனின் வீட்டில் இத்தா இருப்பாள். கணவன் அவளை வீட்டிலிருந்து வெளியேற்றக் கூடாது. அல்லாஹ் கூறுகின்றான்: நபியே! நீங்கள் பெண்களை விவாகரத்துச் செய்தால் அவர்களின் இத்தாவைக் கணக்கிடக்கூடிய (மதவிடாய் இல்லாத) காலத்தில் விவாகரத்துச் செய்யுங்கள். மேலும், "இத்தாவை நீங்கள் கணக்கிட்டுக் கொள்ளுங்கள். மேலும், உங்கள் இரட்சகனான அல்லாஹ்வை அஞ்சிக்கொள்ளுங்கள். அவர்கள் பகிரங்கமான ஏதேனும் மானக் கேடானதைச் செய்தாலேயன்றி, அவர்களை நீங்கள் அவர்களது வீடுகளை விட்டும் வெளியேற்ற வேண்டாம். அவர்கள் வெளியேறவும் வேண்டாம். இவை அல்லாஹ்வின் வரம்புகளாகும். எவன் அல்லாஹ்வின் வரம்புகளை

மீறுகின்றானோ, அவன் தனக்குத் தானே அநியாயம் செய்துகொண்டான். (சேர்ந்துவாழ) இதன் பின்னரும் அல்லாஹ் ஒரு வழியை உண்டாக்கலாம் என்பதை நீர் அறியமாட்டீர். ( 65 : 1).

அவ்வாறே அவள் கணவன் வீட்டிலிருந்து வெளியே செல்லக் கூடாது. மேலும் கணவனை விட்டும் தன்னை மறைத்துக் கொள்ளாமல் அவருக்காக தன்னை அழகுபடுத்திக்கொள்ள வேண்டும். இந்த விவாகரத்தின் பின் அல்லாஹ் கணவன் எதிர்பார்க்காத ஒன்றை ஏற்படுத்தி, அவளை மீட்டி விடலாம். அல்லாஹ் கூறுகின்றான்: இதன் பின்னரும் அல்லாஹ் ஒரு வழியை உண்டாக்கலாம் என்பதை நீர் அறியமாட்டீர். ( 65 : 1).

இத்தாவுடைய காலம் முடிவடைந்தும் அவளை மீட்டிக் கொள்ளாவிட்டால் அவனை விட்டும் அவள் பிரிந்து விடுகிறாள். இது முதலாவது விவாகரத்தாகவோ அல்லது இரண்டாவது விவாகரத்தாகவோ இருந்தால் அது சிறிய பிரிவாக இருக்கும். அவளுடைய விருப்பத்தின் படியும், புதிதாக மஹர் கொடுத்த பின்புமே அவளோடு சேர முடியும். விவாகரத்து மூன்றாவது கூறப்பட்டதாக இருந்தால் அது பெரிய பிரிவாக கருதப்படும். மற்றொருவரை

திருமணம் செய்து அவர் விவாகரத்து செய்யும் வரை கணவருக்கு ஹலாலாகமாட்டாள்.

இருவரும் விவாகரத்துச் செய்து பிரிந்த பின் ஒருவர் மற்றவரின் இரகசியங்களை பரப்புவதையும், குறைகளைக் கூறுவதையும் அல்லது குழந்தைகளுக்கிடையில் பிரச்சினைகளை மூட்டி விடுவதை அல்லது குழந்தைகளை தாயை அல்லது தந்தையை விட்டும் உறவை துண்டித்து விடுவதை விட்டும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். அல்லாஹ்வே உதவியாளன்.

## இறுதியாக...

எனது சகோதர வாசகர்களுக்கு கூற விரும்புவது, நான் கூறியவைகளில் சரியானது இருந்தால் அது எனது இறைவனின் உதவியிலும் கிருபையிலும் உள்ளதாகும். பிழைகள் இருப்பின் அது என்னிடமிருந்தும் ஷைத்தானிடமிருந்தும் எற்பட்ட தாகும். அதற்காக அல்லாஹ்விடம் தவ்பா செய்து பாவமண்ணிப்பபபுத் தேடுகிறேன்.

# கடைசியாக..

எல்லாத் தம்பதிகளையும் அல்லாஹ் சீராக்கி வைப்பானாக. மேலும் அவர்களுக்கிடையில் அன்பையும், பாசத்தையும் ஏற்படுத்தி, அவர்கள் இருவரையும் அவர்களின் உள்ளத்தின் கெடுதிகள், மனோ இச்சை, ஷைத்தான் ஊசலாட்டங்கள் ஆகியவைகளை விட்டும் பாதுகாப்பானாக. உலகத்தாரின் இரட்சகன் அல்லாஹ்வுக்கே புகழ் அனைத்தும். எமது நபி முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவரகள் மீதும் அவர்களின் குடும்பத்தினர், தோழர்கள் அனைவர் மீதும் ஸலாத்தும் ஸலாமும் உண்டாவதாக.

அடிப்படை மூலாதரங்கள்

- அல்குர்ஆண்
- அல்பவாஇத் - இப்னுல் கையிம்
- ஸஹீஹுல் புகாரி
- ஸஹீஹு முஸ்லிம்
- ஸுனன் அபீதாவூத்
- ஸுனனுன் நஸாயீ
- ஸுனனுத் திர்மிதி
- முஸ்னதுல் இமாம் அஹ்மத்
- தப்ஸீருஸ் ஸஅதி
- மவ்ஸுஅது நழ்ரதுன் நஈம்

# தலைப்புகள்


| | | |
|---|---|---|
| பீடிகை | | 1 |
| அமைதியான குடும்ப வாழ்விற்கு வழிகள்4 | | |
| முன்னுரை | | |
| 1 | தொழுகையை நிலை நாட்டுதல் | 8 |
| 2 | திக்ருகளை ஓதி வருதல் | 12 |
| 3 | அதிகமாகப் பிரார்த்தனை செய்தல் | 16 |
| 4 | அல்குர்ஆனை ஓதுதல் | 18 |
| 5 | சிறந்த குடும்ப உறவு | 21 |
| 6 | ஓய்வு நேரத்தை வீட்டில் கழித்தல் | 24 |
| 7 | கணவன், மனைவி புரிந்துணர்வு | 29 |
| 8 | மென்மையாய் நடந்து கொள்ளல் | 30 |
| 9 | பொருப்படுத்தாமை | 34 |
| 10 | கண்டித்தலும், வெளிப்படைத் தன்மையும் | 36 |
| 11 | நல்லுபதேசம் | 38 |
| | அமைதியான குடும்ப வாழ்க்கைக்குறிய தடைகள் | 40 |
| 1 | தொலைத் தொடர்பு சாதனங்களும் தவறான பயன்பாடும். | 41 |
| 2 | பாவங்களில் அலட்சியம் | 44 |

| | | |
|---|---|---|
| 3 | குடும்ப உறவினர்களின் தேவையற்ற தலையீடு | 45 |
| 4 | கணவனை அலடசியம் செய்தல் | 46 |
| 5 | புகைத்தல், போதைப் பொருள், மதுபானப் போன்ற தீய பழக்கவழக்கம். | 49 |
| 6 | கோபம் | 51 |
| 7 | பொய் பேசுதல் | 52 |
| 8 | வீட்டுப் பிரச்சினைகளை பகிரங்கப்படுத்தல் | 54 |
| 9 | தீய எண்ணம் | 56 |
| 10 | மனைவிக்கு துரோகம் செய்தல் | 58 |
| சட்டதிட்டங்களும், எச்சரிக்கைகளும் | | |
| விவாகரத்துச் செய்வதற்கு முன் அறிய வேண்டியவைகள் | | 65 |
| விவாகரத்து செய்வதற்கு முடிவு செய்யும் போது | | 72 |
| விவாகரத்து செய்த பின் எவ்வாறு நடந்துகொள்வது | | 73 |
| உசாத்துணை நூல்கள் | | |